# தமிழ் சொல்
TAMIL SOUL

Volume : 1 | Issue : 5 | August 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly)
மலர் : 1 | இதழ் : 5 | ஆகஸ்ட் 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்)


# திராவிட மாடல் ஆட்சியில் உயர் ஆராய்ச்சி கல்விக்கு பொற்காலம்!

## லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




திராவிட மாடல் ஆட்சி, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியின் நூற்றாண்டு தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

இதில் சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் பொன்முடி, சேகர்பாபு மற்றும் தயாநிதி மாறன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், டாக்டர் எழிலன், இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இயேசு சபை மாநில தலைவர் ஜெபமாலை இருதயராஜ், வி.ஐ.டி. வேந்தர் ஜி.விஸ்வநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சென்னையை சுற்றி மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் ஏராளமான கல்லூரிகளை உருவாக்கியுள்ளோம். ஆனால், நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலை இருந்ததா என்றால் இல்லை. தமிழகம் முழுவதும் இருந்த கல்லூரிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். கல்விதான் அழிக்க முடியாத செல்வம் என்று கூறுகிறோம். ஆனால், அந்த செல்வம் அப்போது எல்லோருக்கும் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்று சொல்வதைவிட, கொடுக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அப்படிப்பட்ட காலக்கட்டத்தில், சேவை மனப்பான்மையுடன் இந்த லயோலா கல்லூரி தொடங்கப்பட்டது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி கண்ணை லயோலா கல்லூரி திறந்து வைத்துள்ளது. இது தமிழகத்துக்கும் பெருமை.

இந்த கல்லூரியில் நான் படிக்காமல் போய்விட்டேனே என்ற கவலையோடு இங்கு வந்து நிற்கிறேன். அப்படியே இந்த கல்லூரியில் நான் சேர்ந்திருந்தாலும் ஒழுங்காக கல்லூரிக்கு வந்திருக்கமாட்டேன். நான் படித்தது மாநில கல்லூரி. அதெல்லாம் சொன்னால் பெரிய கதை. லயோலா என்று சொன்னாலே பெருமைதான். ஒரு கெத்துதான். என்னுடைய மகன், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் படித்தது இந்த கல்லூரியில் தான். அவர் மட்டுமல்ல. தயாநிதிமாறன் எம்.பி.யும், அவரது சகோதரர் கலாநிதிமாறனும் இந்த கல்லூரியில்தான் படித்தனர். நான் மட்டும்தான் 'மிஸ்' ஆகிவிட்டேன்.

இந்தியாவில் அதிகளவு கல்வி நிறுவனங்கள் இருக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது. கல்விதான் ஒருவரின் எல்லா தடைகளையும் தகர்த்து தலைநிமிர செய்யும் என்று உயர்ந்து கல்வி புரட்சியை தொடங்கி வைத்தது நீதிக்கட்சி. அந்த நீதி கட்சி வழிவந்தவர்கள் நாங்கள்.

அதனால்தான், நாங்கள் கல்விக்கு தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கி வருகிறோம். நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் போன்ற திட்டங்கள் மூலம் அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்தால்தான் நாம் திராவிட மாடல் என்று சொல்வதற்கு அர்த்தம் இருக்கும்.

காமராஜரின் ஆட்சி காலம் பள்ளி கல்வியின் பொற்காலமாக இருந்தது. கருணாநிதியின் ஆட்சி காலம் கல்லூரி கல்வியின் ஆட்சியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சி, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது. நாங்கள் நாடு ஒளிபெற பாடுபடுகிறோம். நீங்கள் மாணவ சமுதாயம் ஒளிபெற பாடுப்படுகிறீர்கள். லயோலா கல்லூரிக்கு புகழும், பெருமையும் கிடைப்பதுபோல், இங்கு படிக்கும் மாணவர்களுக்கும் அது கிடைக்கவேண்டும்.

மாணவர்கள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வியின் தேவையை அடுத்தடுத்து வரும் மாணவர்களிடம் பதிய வைக்க வேண்டும். ஏனெனில், கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வருகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையிலான பேச்சுகள் மீண்டும் எழ தொடங்கி உள்ளது. அதை அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். மாணவர்கள் அறிவு கள பயணத்தை பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக லயோலா கல்வி நிறுவனத்தின் அதிபர் ஜெ.அந்தோணி ராபின்சன் வரவேற்று பேசினார். இறுதியில் லயோலா கல்லூரி முதல்வர் ஏ.லூயிஸ் ஆரோக்கியராஜ் நன்றி கூறினார்.

# உலகின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கான தீர்வுகளை இந்தியா கண்டுபிடித்து வருகிறது

## வேளாண் பொருளாதார நிபுணர்களின் சர்வதேச மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்!




உலகின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கான தீர்வுகளை இந்தியா கண்டுபிடித்து வருகிறது என்று வேளாண் பொருளாதார நிபுணர்களின் சர்வதேச மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32—வது சர்வதேச மாநாட்டு புதுடெல்லியில் ஆகஸ்ட் 3 தொடங்கியது. 4 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர்,

"65 ஆண்டுகளுக்குப் பிறகு இதுபோன்ற மாநாடு இந்தியாவில் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. நீங்கள் அனைவரும் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருக்கிறீர்கள். இந்தியாவின் 12 கோடி விவசாயிகள், 3 கோடி பெண் விவசாயிகள், 3 கோடி மீனவர்கள் சார்பாக உங்களை வரவேற்கிறேன். தற்போது நீங்கள் 55 கோடி விலங்குகள் வாழும் ஒரு நாட்டில் இருக்கிறீர்கள். விவசாயம் ஆதிக்கம் செலுத்தும், விலங்குகளை நேசிக்கும் நாட்டிற்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

உணவு மற்றும் விவசாயம் பற்றிய எங்கள் பாரம்பரியங்களும் அனுபவங்களும் எங்கள் நாட்டைப் போலவே பழமையானவை. இந்தியாவின் விவசாய பாரம்பரியத்தில், அறிவியலுக்கும் தர்க்கத்திற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மருத்துவ குணங்கள் கொண்ட உணவை உட்கொள்ளும் ஆயுர்வேத விஞ்ஞானம் எங்களிடம் உள்ளது. இது இந்திய சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன், 'கிருஷி பராசரர்' என்ற கிரந்தம் எழுதப்பட்டது. அது மனித வரலாற்றின் பாரம்பரியம்.

விவசாயத்தைப் பொருத்தவரை இந்தியாவில் இன்றும் நாங்கள் ஆறு பருவங்களை மனதில் வைத்துதான் திட்டமிடுகிறோம். எங்களிடம் 15 விவசாய காலநிலை மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்த சிறப்புகளைக் கொண்டுள்ளது. இங்கிருந்து சுமார் 100 கிலோமீட்டர் பயணம் செய்தால் அங்கு விவசாயம் வேறுமாதிரி நடக்கும். இந்த பன்முகத்தன்மை இந்தியாவை உலகின் உணவுப் பாதுகாப்புக்கான நம்பிக்கைக் கீற்றை வழங்குகிறது.

இன்று இந்தியா உணவு உற்பத்தியில் உபரி நாடாக திகழ்கிறது. உலகின் மிகப் பெரிய பால், தானியங்கள், பருப்பு உற்பத்தியாளர்களாக நாங்கள் இருக்கிறோம். ஒரு காலத்தில் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு உலகின் கவலையாக இருந்தது. இன்று இந்தியா உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கான தீர்வுகளை கண்டுபிடித்து வருகிறது.

தண்ணீர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை ஊட்டச்சத்துக்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. ஆனால் இதற்கு இந்தியாவிடம் ஒரு தீர்வு உள்ளது. சிறுதானியங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடாக இன்று இந்தியா உள்ளது. இந்த சிறுதானியங்களை உலகம் சூப்பர்ஃபுட் என்று அழைக்கிறது. நாங்கள் அதற்கு ஸ்ரீ அன் என்று பெயரிட்டுள்ளோம். குறைந்தபட்ச நீர் மற்றும் அதிகபட்ச உற்பத்தி என்ற கொள்கையின் அடிப்படையில், இந்தியாவின் சூப்பர்ஃபுட் உலகளாவிய ஊட்டச்சத்து பிரச்சினையை தீர்க்கும். இந்தியா தனது சூப்பர்ஃபுட்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளது" எனத் தெரிவித்தார்.

ஐசிஏஇ 2024 இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முன்னணி தொழில் வல்லுநர்களுக்கு உலகளாவிய சகாக்களுடன் தங்கள் பணி மற்றும் கட்டமைப்பை முன்வைக்க ஒரு தளமாக இந்த மாநாடு கருதப்படுகிறது. ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல், தேசிய மற்றும் உலகளாவிய அளவில் கொள்கை வகுப்பதில் செல்வாக்கு செலுத்துதல் மற்றும் டிஜிட்டல் விவசாயம் மற்றும் நிலையான வேளாண்—உணவு அமைப்புகளில் முன்னேற்றங்கள் உள்ளிட்ட இந்தியாவின் விவசாய முன்னேற்றங்கள் இந்த மாநாட்டில் விவரிக்கப்படும். இந்த மாநாட்டில் 75 நாடுகளைச் சேர்ந்த 1,000 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்!**



# 20 ஆண்டுகளில் 5,557 லஞ்ச வழக்குகள் பதவு-அரசு தகவல்!

“தமிழகத்தில் 20 ஆண்டுகளில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் 5,557 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இதில் 3,035 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது” என உயர்நீதிமன்றத்தில் அரசு தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட கல்வித் துறையில் ஆர்எம்எஸ்ஏ திட்டத்தில் கடந்த 2016— 2017 ஆண்டில் நடைபெற்ற முறைகேடு தொடர் பாக 2017—ல் லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். அந்த வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய லஞ்ச ஒழிப்பு போலீஸாருக்கு உத்தரவிடக் கோரி குணசேகரன் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி கே.கே.ராமகிருஷ் ணன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, 2017—ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் இது வரை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததற்கு நீதிபதி அதிருப்தி தெரிவித்தார். தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்த பதில் மனுவில், தமிழகத்தில் லஞ்ச வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களில் 12 துணை சட்ட ஆலோசகர்கள், 2 கூடுதல் சட்ட ஆலோசகர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது. இப்பணியிடங்களை நிரப்ப குற்றவியல் துறை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார் எனக் கூறப்பட்டிருந்தது.

தலைமை குற்றவியல் அரசு வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா வாதிடுகையில், “தமிழகத்தில் 2004 முதல் 2024 வரையிலான 20 ஆண்டுகளில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் 5557 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இதில் 3035 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1059 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைக்கும், 574 வழக்குகளில் தீர்ப்பாய ஒழுங்கு நடவடிக்கைக்கும் பரிந்துரைக்கப்பட் டுள்ளது” என்றார்.

பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: “குற்றவியல் நீதி பரிபாலன முறை சிறப்பாக இயங்க கூடுதல் நீதிமன்றங்களை உருவாக்குவதுடன் போதுமான அரசு வழக்கறிஞர்களையும் நியமிக்க வேண்டும். போதுமான அளவு அரசு வழக்கறிஞர்கள் இல்லாவிட்டால் குற்றவியல் நீதிமன்றங்கள் முடங்கும் நிலை ஏற்படும். இதனால் உள்துறை முதன்மை செயலாளர் எதிர்மனுதாரராக சேர்க்கப்படுகிறார்.

அவர் தமிழகம் முழுவதும் குற்றவியல் நீதிமன்றங்களில் எத்தனை அரசு வழக்கறி ஞர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது? இந்த காலியிடங்களை நிரப்ப என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு வழக்கறிஞருக்கு 1.8.20204—க்குள் தகவல் அளிக்க வேண்டும். அதை அரசு வழக்கறிஞர் 2.8.2024—ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்” என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் டிஎஸ்பி பதவி உயர்வு கிடைக்காமல் 7 ஆண்டுகளாக காத்திருக்கும் காவல் ஆய்வாளர்கள்!



தமிழகத்தில் டிஎஸ்பி பதவி உயர்வு கிடைக்காமல் தொடர்ந்து 7 ஆண்டுகளாக காத்திருக்கும் காவல் ஆய்வாளர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

தமிழக காவல்துறையில் சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கடந்த 1997—ல் சட்டம்—ஒழுங்கு, ஆயுதப்படை, பட்டாலியன் பிரிவுகளுக்கு காலி இடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் தனித்தனியாக நேரடி காவல் உதவி ஆய்வாளர்கள் தேர்வு நடந்தது. இத்தேர்வில் சுமார் 800—க்கும் மேற்பட்டோர் உதவி ஆய்வாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் சுமார் 10 ஆண்டுகளில் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்றனர்.

தொடர்ந்து அடுத்த 10 ஆண்டுகளில் இவர்களுக்கு டிஎஸ்பி—க்களாக பதவி உயர்வு அளிக்க பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் எவ்வித குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதவர்களுக்கு விதிமுறையின்படி, 2017—ல் டிஎஸ்பி—க்களாக பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். ஆனாலும், கிடைக்கவில்லை. அடுத்த ஓரிரு ஆண்டில் மீண்டும் பதவி உயர் வுக்கான பட்டியல் தயாரானது. இப்பட்டியலில் இடம் பெற்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் சென்னை காவல் துறை பயிற்சி பள்ளியில் 6 மாத பயிற்சிக்கு பிறகு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இந்நிலையில், பட்டியலில் இடம் பெற்று, பயிற்சியும் முடித்த சுமார் 80—க்கும் மேற் பட்ட காவல் ஆய்வாளர்களுக்கு சுமார் 7 ஆண்டு நெருங்கும் நிலையிலும் டிஎஸ்பி பதவி உயர்வு இன்னும் கிடைக்கவில்லை என்கிறார்கள். இதனால் இவர்கள் தொடர்ந்து பல்வேறு காவல் நிலையங்களில் காவல் ஆய்வாளர்களாகவே பணியில் நீடிக்கின்றனர். இது பற்றி காவல்துறை தலைமை அலுவலகத்திற்கு பல்வேறு முறை வலியுறுத்தியும் இதுவரையிலும் இவர்களுக்கு பதவி உயர்வு வந்து சேர்ந்த பாடில்லை. இதனால் 80 ஆய்வாளர்களும் விரக்தியில் இருப்பதாக புலம்புகின்றனர்.

இது தொடர்பாக பேசிய பதவி உயர்வுக்காக காத்திருக்கும் ஆய்வாளர்கள் சிலர், "பொதுவாக சட்டம் — ஒழுங்கு, ஆயுதப் படை, பட்டாலியன் பிரிவுக்கென காவலர் கள், எஸ்ஐ—க்களை தேர்ந்தெடுப்பது வழக்கம். இதன்படி, கடந்த 1997 பேட்ஜில் தேர்வான எங்களுக்கு ஆய்வாளர் பதவி உயர்வு ஓரளவுக்கு குறித்த காலத்தில் கிடைத்தது. டிஎஸ்பி பதவி உயர்வு என்பது இன்னும் எட்டாக் கனியாகவே இருக்கிறது.

சட்டம்—ஒழுங்கு, ஆயுதப்படை பிரிவில் தேர்வானவர்களுக்கு முறையாக டிஎஸ்பி பதவி அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், இதிலும் சிலருக்கு கிடைக்கவில்லை. பட்டாலியன் பிரிவில் தேர்வான பெரும்பாலானோர் இன்னும் டிஎஸ்பி—யாக முடியவில்லை. பட்டியலில் முன்னுரிமை அடிப்படையில் இன்றி, ஏதாவதொரு வழக்கு மற்றும் வாரண்ட் கைது நடவடிக்கையை காரணம் காட்டி, முன்னுரி மையை பின்னுக்கு தள்ளி முன்னதாகவே பதவி உயர்வை சிலர் பெற்று இருப்பதும் தெரிகிறது.

எதுவானாலும் சரி, குறிப்பிட்ட காலத் தில் எங்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தால் மட்டுமே அதற்கான பணப்பலன், அந்தஸ்தை பெற முடியும். எங்கள் துறையின் அதிகாரிகள் இனிமேலும் இந்த விஷயத்தில் தாமதிக்காமல் நடவடிக்கை எடுத்தால் நல்லது" என்று ஆய்வாளர்கள் கூறினர்.

# ரயில் நிலையங்களை 3 மாதங்களுக்கு ஒருமுறை மக்கள் பிரதிநிதிகள் ஆய்வு செய்ய வேண்டும்!

## ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா அறிவுறுத்தல்!






ரயில் நிலையங்களை அந்தந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும் என ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா அறிவுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி ரயில் நிலையத்தில் அவர் ஆய்வு மேற்கொண்டார். புதுச்சேரி ரயில் நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் குறித்த மாதிரியை கணினி மூலம் அவர் பார்வையிட்டார். பின்னர் கட்டுப்பாட்டு அறை, பயணிகளுக்கான குடிநீர் வசதி மற்றும் கண்காணிப்புக் கேமிரா அறைகளையும் அவர் பார்வையிட்டார்.

ரயில் நிலைய முதல் நடைமேடைப் பகுதியில் இருந்த கடைகளை பார்வையிட்ட அவர் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினருக்கு கடைகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். மேலும், அந்தந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகள் ரயில் நிலையங்களில் 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு மேற்கொள்ளவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆய்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் கூறுகையில், “சுமார் 140 ஆண்டுகள் பழமை வாய்ந்த புதுச்சேரி ரயில் நிலையம் தற்போது ரூ.93 கோடியில் சீரமைக்கப்படுகிறது. பிரதமரும், ரயில்வே துறை அமைச்சரும் நாட்டில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களையும் மேம்படுத்தி மக்களுக்கான சேவையை வழங்குவதில் கவனம் செலுத்தி வருகின்றனர்” என்றார். ரயில் நிலைய ஆய்வின் போது உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத் தலைவர் செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் .செல்வகணபதி மற்றும் ரயில்வே உயரதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வீணாக கடலில் கலக்கும் மழைநீரை சேமிக்க என்ன திட்டம் உள்ளது? - ஐகோர்ட் கேள்வி!



பருவமழைக் காலங்களில் வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை சேமிக்க என்ன திட்டம் உள்ளது என கேள்வி எழுப்பிய சென்னை உயர் நீதிமன்றம், இதுகுறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

பருவமழைக் காலங்களில் வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை சேமித்து வைக்கும் வகையில், சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள ஆறுகள், ஏரிகள், அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளை சீரமைத்து அவற்றை ஆழப்படுத்தவும், தண்ணீர் விரயமாவதை தடுக்கவும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி வழக்கறிஞர் பி. ஜெகன்நாத் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ண குமார் மற்றும் நீதிபதி கே.கும ரேஷ்பாபு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், “தலைநகரான சென்னை மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் பருவமழை காலங்களில் கடலில் வீணாக கலக்கும் தண்ணீரை அருகில் உள்ள ஏரிகளுக்கு ஏன் திருப்பி விட்டு அவற்றை பாதுகாக்கக்கூடாது?” எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு தமிழக அரசு தரப்பில் ஆஜரான மாநில அரசு ப்ளீடர் எட்வின் பிரபாகர், “நீர்வளத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே தனியாக துறை உருவாக்கப்பட்டுள்ளது. குடிநீர், விவசாயம் மற்றும் இதர தேவைகளுக்கான தண்ணீரை பாதுகாக்க பல் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யப்படும்” என்றார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், “எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பருவமழை காலங்களில் வீணாக கடலில் கலக்கும் நீரை பாதுகாத்து, சேமிக்க என்ன திட்டம் உள்ளது என்பது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மழை நீரை ஏரி, குளங்களுக்கு திருப்பி விடுவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும். தமிழகத்தில், நீர்வளத் துறை உருவாக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த டேங்கர் லாரி ஓட்டுநர் முருகன் என்பவர் கடந்த ஜூலை 16 அன்று கர்நாடகா மாநிலம், சிரூரு பகுதியில் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்ததையடுத்து, அவரது மனைவி செவ்வந்தியிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சத்திற்கான காசோலையை கலெக்டர் கே.எம்.சரயு, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் முன்னிலையில் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார். அப்போது, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், வட்டாட்சியர் திருமால் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# 20 ஆண்டுகளில் 12.30 லட்சம் வழக்குகள் விசாரிப்பு மதுரை உயர்நீதிமன்ற அமர்வு சாதனை!

உயர் நீதிமன்ற மதுரை அமர்வு, கடந்த 20 ஆண்டுகளில் 12.30 லட்சம் வழக்குகளை விசாரித்து சாதனை படைத்துள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு உலகநேரியில் 24.07.2004—ல் தொடங் கப்பட்டது. மதுரை, திண்டுக்கல், கரூர், திருச்சி, நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தேனி, நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த வழக்குகள் மதுரை அமர்வில் விசாரிக்கப்படுகின்றன. நாட்டின் பசுமையான அமர்வு என மதுரை அமர்வு அழைக்கப்படுகிறது.

மரங்களுக்கு மத்தியில் அழகான உயரமான நவீன வசதிகள் நிரம்பிய நீதிமன்ற அரங்குகள், நிர்வாகக் கட்டிடம், தலைமை நீதிபதி, சக நீதிபதிகளுக்கான குடியிருப்பு கள், நீதிபதிகளுக்கான உணவுக்கூடம், தங்கும் விடுதி, வழக்கறிஞர்கள் அறைகள், மத்திய, மாநில அரசு வழக்கறிஞர்கள் அலுவலகம், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், மருந்தகம், உணவகம் என அனைத்தும் ஒரே வளாகத்தில் அமைந்திருப்பது மதுரை அமர்வின் தனிச் சிறப்பு.

தொடக்கத்தில் இங்கு 3 நீதிபதிகள் மட்டுமே இருந்த நிலையில். தற்போது 20 பேர் உள்ளனர். மதுரை அமர்வில் வழக்கறிஞர்களாகப் பணி புரிந்த ஜோதிமணி, நாகமுத்து, டி.ராஜா, ஆர்.எஸ். ராமநாதன், சுகுணா, எஸ்.எஸ்.சுந்தர், நிஷாபானு, ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி, பி.புக ழேந்தி, ஆர்.விஜயகுமார், எல்.விக்டோரி யாகவுரி, கே.கே.ராமகிருஷ்ணன் ஆகியோர் நீதிபதிகளாகத் தேர்வாகினர். இதுவரை 25—க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மூத்த வழக்கறிஞர்களாகத் தேர்வாகி உள்ளனர்.

மதுரை அமர்வு தொடங்கிய நாளி லிருந்து வழக்குகள் தாக்கலாவது தொட ர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது. இந்த 20 ஆண்டுகளில் மதுரை அமர்வில் 12.30 லட்சம் வழக்குகள் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளன. 77,751 வழக்குகள் நிலுவையில் உள்ளன. மதுரை அமர்வின் 20—



வது ஆண்டு நிறைவு விழா உயர் நீதிமன்றத்தால் மதுரையில் வெகுவிமரிசையாக நடந்தது. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சந்திரசூட் சிறப்பு விருந்தி னராக பங்கேற்றுப் பேசும்போது, மதுரை அமர்வு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மதுரை அமர்வு அளித்த தீர்ப்புகள் நீதியை மட்டும் வழங்கவில்லை, சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தியது என மகிழ்ச்சி தெரிவித்தார்.

சந்திரசூட் மேலும் பேசுகையில், தொடக்கத்தில் டில்லி உட்பட பல்வேறு இடங்களி லிருந்து வழக்கறிஞர்கள் மதுரை வந்து வாதா டினர். தற்போது மதுரை அமர்வு வழக்கறி ஞர்களை வெளிமாநில நீதிமன்றங்களுக்கு அழைக்கும் நிலை உருவாகியுள்ளது. அந்தளவு வழக்கறிஞர்கள் தங்களின் திறமையை வளர்த்துக் கொண்டுள்ளனர், என்றார். உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் பேசுகையில், மதுரை அமர்வு போல் உலகில் வேறு எங்கும் நீதிமன்ற கட்டிடம் இல்லை, என பெருமைபடத் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்யாகாந்த், பி.ஆர்.கவாய் ஆகியோர் பேசுகையில், மதுரை அமர்வின் அருமை, பெருமைகளைக் கேட்டு வியந்து நாங்கள் 20—வது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்றோம். இங்கு வந்து பார்த்த பிறகு அது உண்மை என தெரிந்துக் கொண்டோம் என்றனர்.

21—வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள தென் மாவட்ட மக்களின் வரப்பிரசாதமாகத் திகழும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் செயல்பாட்டுக்கு வழக்கறிஞர்கள், பொது மக்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

# நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## குற்ற வழக்கு தொடர்புத்துறை இயக்குநர் அறிவுறுத்தல்!



தமிழக அரசின் மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞராகப் பதவி வகித்து வரும் அசன் முகமது ஜின்னா, புதிய குற்றவியல் சட்டமான பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டத்தின் கீழ் அரசு குற்றவழக்குத் தொடர்வுத்துறையின் பொறுப்பு இயக்குநராக நியமிக்கப்பட்டு, பொறுப்பேற்றுள்ளார்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள குற்ற வழக்கு தொடர்வுத்துறை துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் பேசியதாவது: தமிழகத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளகுற்ற வழக்குகள் மீது தனிக்கவனம் செலுத்தி அவற்றை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கீழமை நீதிமன்றங்களில் நீதிமன்ற காவலுக்கான மனுக்கள் தாக்கல் செய்யப்படும் போது வழக்கின் ஆவணங்களை நன்கு பரிசீலித்து, நீதிமன்றத்துக்கு அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் உதவிகரமாக இருக்க வேண்டும். சிறப்பான பணிக்கு விருது: அரசு தரப்பு சாட்சியாக அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் சேர்க்கப்படும் போது எதிர் தரப்பு வழக்கறி ஞர்களின் குறுக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் கண்டிப்பாக ஆஜராக வேண்டும்.

சிறப்பாகப் பணியாற்றும் அரசு குற்ற வியல் வழக்கறிஞர்களை கவுரவிக்கும் விதமாக 'தமிழக முதல்வர்விருது' வழங்கும் கருத்துரு வும் பரிசீலனையில் உள்ளது. காலிப்பணி யிடங்களை நிரப்புவது, பதவி உயர்வு போன்ற கோரிக்கைகளும் விரைவில் நிறைவேற்றப்படும், என்றார்.

இதற்கி டையே தமிழ்நாடு அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கத்தினர் தலைமைச் செயலருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில், "ஏற்கனவே தமிழகத்தில்அரசு குற்றவியல் வழக்கறிஞர்களாக தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று நியமிக்கப்படுவோர் கிரேடு 2 அதிகாரிகளாகவும், அதன் பிறகு கிரேடு 1 ஆகவும், அதன்பிறகு அரசு குற்றவியல் வழக்கறிஞராகவும் பதவி உயர்வில் நியமிக்கப்படுகின்றனர்

எங்களுக்கு குற்ற தொடர்வுத் துறை யில் உதவி இயக்குநர், துணை இயக்குநர், இணை இயக்குநர், இயக்குநர் என தற்போது பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாரதிய நகரிக் சுரக்ஷாசன் ஹிதா சட்டத்தின் கீழ் 15 ஆண்டு அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர் அல்லது அமர்வு நீதிபதியை நேரடியாக இத்துறையின் இயக்குநராக நியமிக்கலாம் என்றும், அதேபோல 7 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த வழக்க றிஞர் அல்லது முதல் வகுப்பு குற்றவியல் நடுவரை உதவி இயக்குநராக நியமிக்கலாம் என்றும் நேரடி நியமனத்துக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.


இதனால் 25 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு குற்றவியல் வழக்கறிஞர்களாகப் பணி யாற்றி வரும் எங்களுக்கான பதவி உயர்வு என்பது கேள்விக்குறியாகி உள்ளது. எனவே பழையபடி புதிதாக வெளிநபர்களை இப்பதவிகளுக்கு நியமிக்காமல், பணிமூப்பு அடிப்படையிலேயே பதவி உயர்வு வழங்க வேண்டும்" என கோரியுள்ளனர்.

# ராமநாதபுரத்தில் செல்போனால் பறிபோன உயிர்! திடீரென செல்போன் வெடிப்பது ஏன்?


இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஒருவர், இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போது அவரது பாக்கெட்டில் இருந்த செல்போன் வெடித்ததால் நிலைத்தடுமாறி கீழே விழுந்து உயிரிழந்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள எம்.எஸ். அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்தவர் ரஜினி (36). இவர் தனியார் வங்கி ஒன்றில் காவலாளியாக பணிபுரிந்தார்.

பரமக்குடியைச் சேர்ந்த இவரது நண்பரான பாண்டியை அழைத்துக் கொண்டு கடந்த ஜூலை 21—ஆம் தேதி காலை இருசக்கர வாகனத்தில் மதுரைக்கு புத்தாடைகள் வாங்க சென்றுள்ளார். அன்று பிற்பகல் ஆடைகளை வாங்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.







### செல்போன் வெடித்து பறிபோன உயிர்

"மதுரையில் இருந்து பரமக்குடியை நோக்கி, கமுதக்குடி அருகே சென்று கொண்டு இருந்த போது, ரஜினி பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த செல்போன் வெடித்தது. இதில் நிலை தடுமாறி கீழே விழுந்த ரஜினியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்'' என பரமக்குடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வண்டியில் அவர் பின்னால் அமர்ந்து பயணித்து வந்த பாண்டியின் தலையில் காயம் ஏற்பட்டது. பரமக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

### வாங்கிய 10 மாதங்களில் வெடித்த செல்போன்

இது குறித்து ரஜினியின் சகோதரர் பி. பாலா,"எனது அண்ணன் 10 மாதங்களுக்கு முன்பாக 9,500 ரூபாய்க்கு ஸ்மார்ட்போன் ஒன்றை வாங்கினார். இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது செல்போன் வெடித்த அதிர்ச்சியில், சாலை தடுப்பில் மோதி உயிரிழந்தார். செல்போன் எப்படி வெடித்தது என்று தெரியவில்லை," என்று கூறினார்.

சமீபத்தில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலைச் சேர்ந்த முதியவர் ப்ளூடூத் ஹெட்போன் அணிந்து பாட்டு கேட்ட போது, ஹெட்போன் வெடித்ததில் அவர் காதில் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆனால் கால்சட்டை பையில் இருந்த செல்போன் திடீரென வெடித்தது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இதற்கான காரணம் குறித்து வல்லுநர்கள் கூறுவது என்ன?

### செல்போன் வெடிக்கும் முன்பே அதனை கண்டறிய முடியுமா?

இது போன்ற நிகழ்வுகள் ஏன் நடக்கிறது என்ற கேள்வியை அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் மின்னணு மற்றும் கருவியல் துறையின் பேராசிரியர் ஜீ .சக்திவேல் கூறுகையில்,

"சில நேரங்களில் பேட்டரிகள் அதிக வெப்பத்தால் வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன அல்லது செல்போன் கீழே விழுந்து பழுது ஏற்பட்டு, வெப்பமடைந்து வெடிக்க வாய்ப்புகள் உள்ளன. பேட்டரியில் உள்ள வேதிப்பொருட்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு ஏற்பட்டாலும் செல்போன்கள் வெடிக்க வாய்ப்புகள் உள்ளன," என்று சக்திவேல் குறிப்பிடுகிறார்.

செல்போன்களில் பெரும்பாலும் லித்தியம் அயன் பேட்டரிகள் பயன்படுத்தப்படுகிறது. நீண்ட நேரம் வெப்பமான சூழலில் இருக்கும் போது அவை வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

### எந்தெந்த காரணங்களால் செல்போன்கள் வெடிக்கின்றன?

செல்போன் வெடிப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளதாக தெரிவிக்கிறார் பேராசிரியர் ஜி. சக்திவேல்.

அளவுக்கு அதிகமான பயன்பாடு, நீண்ட நாட்களுக்கு பயன்படுத்துதல், செயல்திறன் குறைவு போன்றவை காரணமாகவும் செல்போன்கள் வெடிப்பதாக அவர் பட்டியலிடுகிறார்.

செல்போன் பேட்டரியில் உள்ள வேதிப் பொருட்கள் நாளடைவில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு ஏற்பட்டு, பேட்டரிகள் வீங்கி வெடிக்க வாய்ப்புகள் உள்ளன.

செல்போன்களை இரவு முழுவதும் சார்ஜ் போடுவதன் மூலமாக பேட்டரியின் செயல் திறன் குறைந்து வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

செல்போன்களில் தொடர்ச்சியாக வீடியோ கேம் விளையாடுவதால் அதிக வெப்பமடையும். இதன் காரணமாக ப்ராசசரில் (processor) அதிக வெப்பம் உருவாகி வெடிப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

செல்போன்களை அதிக வெப்ப நிலையில் பயன்படுத்துவதன் வழியாக பேட்டரிகள் வெப்பநிலை அதிகரித்து வெடிக்க வாய்ப்பு உள்ளது என்கிறார் அவர்.

### செல்போன் பேட்டரி திறன் குறைந்ததை கண்டறிவது எப்படி?

செல்போன் பேட்டரி முழுவதும் சார்ஜ் செய்தாலும் குறுகிய நேரத்திற்குள் பேட்டரி உடனடியாக குறைவது ஒரு முக்கியமான அறிகுறியாகும் என்கிறார் சக்திவேல்.

செல்போனை சில நிமிடங்கள் பயன்படுத்தியதும் அதிலிருந்து அதீத அளவில் வெப்பம் வெளியேறுகிறதா என்பதை கவனிக்க வேண்டும் என்று எச்சரிக்கும் அவர், செல்போன் பேட்டரி அமைந்திருக்கக் கூடிய பகுதி வீங்கி (bulge) வெளியே தெரியும் பட்சத்தில் அந்த செல்போன் உபயோகத்தை மறுபரிசீலனை செய்யுமாறு எச்சரிக்கிறார்.

செல்போன் கீழே விழுந்த பின் பேட்டரி செயல்பாட்டில் மாற்றம் ஏற்படுவதன் வழியாகவும் பேட்டரி திறன் குறைந்து வருகிறது என்பதை அறியமுடியும் என்கிறார் அவர்.

### செல்போன் வெடிப்பதை தடுப்பது எப்படி?

''செல்போன்களை இரவு முழுவதும் சார்ஜரில் வைப்பதை தவிர்க்க வேண்டும். இது பேட்டரியின் சக்தியை சிறிது சிறிதாக குறைக்கும். சூப்பர்சார்ஜர் மூலம் சார்ஜ் செய்யப்படும் செல்போன்களை ஒரு மணி நேரம் மட்டும் சார்ஜ் செய்தால் போதுமானது"

"குறைந்த விலையில் கிடைக்கும் சார்ஜர்களை பயன்படுத்துவதை தவிர்த்து அந்த குறிப்பிட்ட கம்பெனியின் சார்ஜர்களை பயன்படுத்த வேண்டும்" என சக்திவேல் கூறுகிறார்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# 836 இந்தியர்களுக்கு 1 மருத்துவர்

## உலக சுகாதார அமைப்பின் அளவுகோலை விஞ்சியது இந்தியா

மத்திய சுகாதார துறையின் இணை அமைச்சர் அனுப்பிரியா படேல் மக்களவையில் கூறியதாவது. தேசிய மருத்துவ ஆணையம், கடந்த ஜூலை மாதம் வெளியிட்ட தரவுகளின்படி 13 லட்சத்து 86 ஆயிரத்து 136 அலோபதி மருத்துவர்கள் மாநில மருத்துவ கழகங்களிலும் தேசிய மருத்துவ ஆணையத்திலும் பதிவு செய்துள்ளனர்.

இவர்களில் 80 சதவீதம் பேர் மருத்துவ பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று எடுத்துக் கொண்டால் ஆயுர் வேதா, சித்தா, யோகா, இயற்கை முறை மற்றும் ஹோமியோபதி சிகிச்சைகளைக் குறிக்கும் ஆயுஷ் மருத்துவ சிகிச்சைகளை அளித்துவரும் 5 லட்சத்து 65 ஆயிரம் மருத்துவர்களும் உள்ளனர்.

ஆக மொத்தம், 836 இந்தியர்களுக்கு 1 மருத்துவர் என்கிற விகிதத்தை இந்தியா எட்டியுள்ளது. இதன் மூலம் 1000 பேருக்கு குறைந்தது 1 மருத்துவர் என்கிற உலக சுகாதார அமைப்பின் அளவுகோலை இந்தியா விஞ்சியுள்ளது. நாட்டின் 731 மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும்



சராசரியாக 1 லட்சத்து 12 ஆயிரத்து 112 இளநிலை மருத்துவ பட்டத்துக்கான எம்பிபிஎஸ் இடங்கள் நிரப்பப்படுகின்றன.

மேலும், 19 எய்ம்ஸ் கல்லூரிகளில் இளநிலை மருத்துவம் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# தென்மண்டலத்தில் சிறந்த 10 காவல் நிலையங்களுக்கு கேடயம்-டிஜிபி வழங்கினார்!



தெற்கு மண்டலத்தில் சிறந்த காவல் நிலையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 காவல் நிலையங்களுக்கு கேடயங்களை டிஜிபி சங்கர் ஜிவால் வழங்கினார்.

தமிழக காவல் துறை சேவையை மேம்படுத்தும் வகையில் திறன்மேம்பாடு, சேவை உள்ளிட்ட பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் மாநில அளவிலும், மாநகர, மாவட்ட அளவிலும் சிறந்த காவல் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுதோறும் தமிழக முதல்வரின் கேடயம் வழங்கப்படுகிறது.

அதன்படி, மாநில அளவிலான சிறந்த 3 காவல் நிலையங்களுக்கு கடந்த குடியரசு தின கொண்டாட்டத்தின்போது, கேடயங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இதன் அடுத்தகட்டமாக, மண்டல வாரியாக சிறந்த காவல் நிலையங்களுக்கு கேடயம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, தெற்கு மண்டலத்தில் மாவட்ட வாரியாக தேர்வு செய்யப்பட்ட 10 சிறந்த காவல் நிலையங்களுக்கு கேடயங்களை டிஜிபி சங்கர் ஜிவால் வழங்கினார்.

தெற்கு மண்டலத்தில் உள்ள மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நகர் காவல் நிலையம், விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை காவல் நிலையம், தேனி மாவட்டம் கடமலைக்குண்டு காவல் நிலையம், திண்டுக்கல் மாவட்டம் நத்தம் காவல் நிலையம், சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையம், திருநெல்வேலி மாவட்டம் முன்னீர்பள்ளம் காவல் நிலையம், ராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையம், தென்காசி மாவட்டம் ஆலங்குளம் காவல் நிலையம், தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி வடபாகம் காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் காவல் நிலையம் என 10 காவல் நிலையங்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. இதை சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகள் பெற்றுக் கொண்டனர்.

# பதிவெண் இல்லாமல் இயக்கப்படும் மணல் லாரிகள்!



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியில் பின்பக்கம் பதிவெண் இல்லாமல் இயக்கப்படும் மணல் லாரிகள் அதி வேகத்தில் செல்வதால் விபத்து அபாயம் நிலவுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல் தாலுகா பெரும் பாதிப்புக்கு உள்ளானது. விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய மழை வெள்ள பாதிப்புகளில் இருந்து மீண்டு வர முடியாமல் இன்று வரை அவர்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தமிழக அரசு உத்தரவுப்படி விளைநிலங்களை மேம்படுத்தும் வகையில் குளங்களில் உள்ள வண்டல் மண் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது நிலத்துக்கான ஆவணங்களுடன் வருவாய்த் துறையில் விண்ணப்பம் செய்கின்றனர். இந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து, விண்ணப்பதாரரின் குடியிருப்பு அருகில் உள்ள குளங்களில் இருந்து மண் எடுத்துக் கொள்ள நீர்வளத் துறையினர் விவசாயிகளுக்கு அனுமதி சீட்டு வழங்குகின்றனர். இவ்வாறு எடுக்கப்படும் வண்டல் மண் விண்ணப்பதாரரின் விலை நிலங்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், குளங்களில் இருந்து வண்டல் மண் எடுத்து செல்லும் லாரிகளின் பின்புறம் பதிவெண் இல்லாமல் இயக்கப்படுவது பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஆழ்வார் திருநகரி, சாயர்புரம், ஏரல் உள்ளிட்ட பகுதிகளில் பின்பக்கம் பதிவெண் இல்லாமல் இயக்கப்படும் மணல் லாரிகள் அதி வேகத்தில் செல்வதால் விபத்து அபாயம் நிலவுவதாக பொதுமக்களும், இதர வாகன ஓட்டிகளும் புகார் தெரிவிக்கின்றனர். நம்பர் பிளேட்களில் பதிவெண்களை தவிர பிற வாசகங்கள் இடம்பெறக் கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், மணல் லாரிகளின் பின்பக்கத்தில் நம்பர் பிளேட்கள் எதுவும் இன்றி இயக்கப்பட்டு வருவது நீதிமன்ற உத்தரவுகளை மீறுவதாக உள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பதிவெண் இல்லாமல் இயக்கப்படும் மணல் லாரிகளால் விபத்து ஏற்படும் பட்சத்தில் உடனடியாக அதை அருகில் உள்ளவர்களால் கண்டறிய முடியாத நிலை ஏற்படும். மேலும், மணல் லாரிகள் குறிப்பிட்ட அளவைவிட தாண்டி அதிக பாரத்தோடு சென்று சாலைகளை சேதப்படுத்தும் நிலை ஏற்பட்டால் அது குறித்து புகார் தெரிவிக்கவும் முடியாமல் போகும்.

எனவே, பதிவெண் இல்லாத மணல் லாரிகளுக்கு நீர்வளத் துறையினர் அனுமதி வழங்கக் கூடாது. அவ்வாறு இயக்கப்படும் மணல் லாரிகளை காவல்துறையினர் பறிமுதல் செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கமண்டல நதியில் மார்பளவு தண்ணீரில் உடல்களை சுமந்து செல்லும் கிராம மக்கள்!

## தலைமுறை தலைமுறையாக தொடரும் வேதனை!



திருவண்ணாமலை: படைவீடு அருகே கமண்டல நதியின் குறுக்கே பாலம் கட்டி கொடுக்காததால் உயிரிழந்தவர்களின் உடல்களை மார்பளவு தண்ணீரில் மிதந்து சுமக்க வேண்டிய நிலை தலைமுறைகளை கடந்து தொடர்வதாக கிராம மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி படைவீடு வழியாக ஆரணியை நோக்கி பாய்கிறது 'கமண்டல நதி'. இந்த நதியின் குறுக்கே ஜவ்வாது மலை அடிவாரத்தில் செண்பகத்தோப்பு அணை கட்டப்பட்டு, மழைநீர் தேக்கி வைக்கப்படுகிறது. இதனால், ஜவ்வாதுமலை அடிவார கிராமங்களை கடந்து செண்பகத் தோப்பு அணை வரை, ஆண்டு முழுவதும் கமண்டல நதியில் மார்பளவுக்கு தண்ணீர் இருக்கும்.

கமண்டல நதியில் தண்ணீர் இருப்பதை மலையடிவார கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளும், கிராம மக்களும் ஒருபுறம் வரவேற்றாலும், மறுபுறம் அவ்வப்போது வேதனைப்படும் நிகழ்வும் தொடர்கிறது. கமண்டல நதியின் குறுக்கே பாலம் கட்டப்படாததால், அத்தியாவசிய தேவைகள், மருத்துவ சிகிச்சை மற்றும் கல்வி கற்க, நதியை நீந்தி செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வாழ்க்கையை வாழ்வதற்கு போராடும் அதே வேளையில், உயிர் துறந்த பிறகும் போராட வேண்டிய நிலை மலையடிவார கிராமங்களில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் தலைமுறை கடந்து தொடர்கிறது. உயிரிழந்தவர்களின் உடல்களை நதியின் நீரில் மிதந்தும், கடந்தும் சுமந்து சென்று இறுதி சடங்கு செய்யப்படுகிறது.

இந்நிலையில், சந்தவாசல் அடுத்த படைவீடு ஊராட்சியில் மல்லிகாபுரம் எனும் கிராமத்தில் வசித்த விவசாயி அருணாசலம்(76) என்பவர் சமீபத்தில் உயிரிழந்துள்ளார். அவரது உடலை, கமண்டல நதியில் சுமந்து சென்று, மறுகரையில் உள்ள மயானத்தில் உறவினர்களும் மற்றும் கிராம மக்களும் இறுதி சடங்கு செய்துள்ளனர். நதியில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால், உயிரிழந்தவரின் உடலுடன் அனைவரும் அடித்து செல்லப்படும் இருப்பார்கள். உயிரை பணயம் வைத்து, ஒவ்வொரு முறையும் சுமார் 60 அடி நீளத்துக்கு மார்பளவு உள்ள தண்ணீரில் மிதந்து சென்று, உயிரிழந்த நபர்களின் உடலுக்கு இறுதி சடங்கு செய்யப்படுகிறது.

இது குறித்து மல்லிகாபுரம் கிராம மக்கள் கூறும்போது, "கமண்டல நதிக் கரையையொட்டி மல்லிகாபுரம், கமண்டலாபுரம், இருளம்பாறை, ராமநாதபுரம் கொல்லைமேடு, நடுவூர், சீராக்கொல்லை உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன.

யாரும் செவி சாய்க்கவில்லை: இக்கிராமங்களில் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். மளிகை, காய்கறிகள், கால்நடைகளுக்கு தீவனங்கள், விவசாயத்துக்கான உரங்கள் உள்ளிட்ட வாழ்வியல் தேவைகளுக்கும், கல்வி கற்கவும் கமண்டல நதியை கடந்து வர வேண்டியுள்ளது. மருத்துவ சிகிச்சைக்கும், இதுதான் எங்களுக்கு பாதை. நதியை கடந்து சென்றால் 2 கி.மீ., தொலைவில் உள்ள படைவீடு கிராமத்தை அடைந்துவிடலாம். சாமந்திபுரம் வழியாக மாற்று பாதையில் 7 கி.மீ., தொலைவு சுற்றிக்கொண்டு செல்ல வேண்டும்.

மல்லிகாபுரம், கமண்டலாபுரம், ராமநாதபுரம், கொல்லைமேடு குக்கிராம மக்களுக்கு கமண்டல நதியின் மறுகரையில் தனித்தனியே மயானம் உள்ளது. உயிரிழந்தவரின் உடலை கமண்டல நதியை கடந்து சென்று இறுதி சடங்கு செய்ய வேண்டும். மார்பளவு தண்ணீரில் உடலை சுமந்து செல்லும் நிலை தலைமுறைகளை கடந்தும் தொடர்கிறது. இதனால், ஆற்றின் குறுக்கே பாலம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்பது எங்களது தலையாய கோரிக்கையாகும்.

அரை நூற்றாண்டுகளை கடந்து ஆட்சி நடத்தும், இரண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியாளர்களிடம் பலமுறை வலியுறுத்தி விட்டோம். ஆனால், யாரும் செவி சாய்க்கவில்லை. ஆட்சிகள் மாறினாலும், காட்சிகள் மாறவில்லை. சுதந்திர இந்தியாவில், உயிரிழந்தவர்களின் உடல்களை ஆற்று நீரில் சுமந்துக்கொண்டு செல்ல வேண்டிய நிலை தொடர்கிறது. இதற்கு தீர்வு காண, அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என கூறி திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தனி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர். உயிரை பணயம் வைத்து, ஒவ்வொரு முறையும் சுமார் 60 அடி நீளத்துக்கு மார்பளவு உள்ள தண்ணீரில் மிதந்து சென்று, உயிரிழந்த நபர்களின் உடலுக்கு இறுதி சடங்கு செய்யப்படுகிறது.

# நல்லா இருந்த யூனியன் கிளப்பும் நாசம் செய்த சமூக விரோதிகளும்





தஞ்சாவூரின் அடையாளங்களில் ஒன்றாக, கடந்த 150 ஆண்டுகளாக உள்ள யூனியன் கிளப்கட்டிடம் தற்போது சமூக விரோதிகளால் சீரழிந்து வருகிறது. இந்தக் கட்டிடத்தை பழமை மாறாமல் சீரமைத்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தஞ்சாவூரில் 1872—ம் ஆண்டு வாசக சாலை மற்றும் நூலகம், நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் பழைய பேருந்து நிலையம் அருகே கோட்டை மதில் சுவர் இடிக்கப்பட்டு, அதிலிருந்த செம்புரான் கற்களை கொண்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டு 1874—ம் ஆண்டு அப்போதைய மாவட்ட நீதிபதி பர்னர் ஆர்தர் கோக் என்பவரால் இந்த வாசக சாலை திறந்து வைக்கப்பட்டது. இதையடுத்து 1892—ம் ஆண்டு இந்தக் கட்டிடத்துக்கு 'தஞ்சாவூர் யூனியன் கிளப்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்த கிளப்பில் ஹாவ்லேக் என்ற பெயரில் ஆங்கில நூலகமும், பாவேந்தர் பெயரில் 5 ஆயிரம் புத்தகங்கள் அடங்கிய தமிழ் நூலகமும், டென்னிஸ் கிளப்பும் இயங்கின. 1919—ம் ஆண்டு பிப்.12—ம் தேதி தஞ்சாவூருக்கு வருகை தந்த ரவீந்திரநாத் தாகூர், இந்த யூனியன் கிளப்புக்கு வருகை தந்து உரையாற்றியுள்ளார். அதேபோல, பேரறிஞர் அண்ணா, பாரதிதாசன் உள்ளிட்ட பல தலைவர்களும் இந்த கிளப்புக்கு வந்து சென்றுள்ளனர்.

இந்த யூனியன் கிளப் கட்டிடத்தில் முன்பு புத்தக கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. அதன்பின், குத்தகை காலம் முடிவடைந்ததாக கூறி கடந்த 2022—ம் ஆண்டு மார்ச் 1—ம் தேதி தஞ்சாவூர் மாநகராட்சி நிர்வாகம் யூனியன் கிளப்பை தனியார் நிர்வாகத்திடமிருந்து கைப்பற்றியது. பின்னர் அந்த இடத்தில் தஞ்சாவூர் மாநகராட்சியின் நகர்ப்புற துணை சுகாதார நிலையம் என்ற அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. தொடர்ந்து, அந்த கட்டிடத்துக்கு வெள்ளையடிக்கப்பட்டது. மேலும் கட்டிடத்தின் சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டது.

இதனால், இந்த வளாகம் பகல் நேரங்களில் கால்நடைகளின் புகலிடமாகவும், இரவு நேரங்களில் 'குடி'மகன்கள் மற்றும் சமூக விரோதிகளின் கூடாரமாகவும் மாறியுள்ளது. இந்த கட்டிடத்தில் எங்கு பார்த்தாலும் காலி மதுபாட்டில்கள், காலி குடிநீர் பாட்டில்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள் கிடக்கின்றன. மேலும், கட்டிடத்தின் பல இடங்களில் விளம்பர சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தஞ்சாவூரின் மையப்பகுதியில், எப்போதும் பரபரப்பாக காணப்படும் பழைய பேருந்து நிலையம் எதிரே உள்ள இந்த கட்டிடத்தை பழமை மாறாமல் பாதுகாக்க வேண்டும். இந்த கட்டிடத்தை சீரமைத்து சொற்பொழிவுகள், நூல் வெளியீட்டு விழாக்கள் நடத்த குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விட வேண்டும் என தஞ்சாவூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள், இலக்கியவாதிகள் மாநகராட்சிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், "தஞ்சாவூர் யூனியன் கிளப் அருகே நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை விரிவாக்கம் செய்ததால், அதன் சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டது. மீண்டும் சுற்றுச்சுவர் எழுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கட்டிடத்தை பாதுகாத்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்படும்" என்றனர்.

# வங்கிக் கணக்குகளைக் குறி வைக்கும் புதிய சைபர் மோசடிகள்-சிக்காமல் தப்பிப்பது எப்படி?

திருப்பத்தூரை சேர்ந்த 32 வயது முபினாவின் செல்போனுக்கு கடந்த இரு வாரங்கள் முன் குறுஞ்செய்தி ஒன்று வந்தது. வீட்டு வேலைகளை செய்து முடித்து விட்டு செல்போனை பார்த்த அவருக்கு குறுஞ்செய்தியின் தகவல்கள் புரியாததால், தனது கணவரை அழைத்துள்ளார். முபினா ஃபாசிலுர்ஹ்மானின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக அந்த குறுஞ்செய்தி கூறியது. அவர் 4.5 கோடி ரூபாய் ஜி.எஸ்.டி வரி செலுத்தாததால், கணக்கு முடக்கப்பட்டுள்ளதாகவும், அதை திருப்பி செலுத்தும் வரை கணக்கை உபயோகப்படுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

“வங்கிக் கணக்கில் சிலிண்டர் மானியம் ரூ.31, மகளிர் உரிமைத் தொகை ரூ.1000, மற்றும் மகளிர் சுய உதவிக் குழு நிதி ஆகியவை மட்டுமே பரிவர்த்தனை செய்யப்படும். எங்கள் பணம் ரூ.2,300 ஐ தற்போது இழந்துள்ளோம்” என்கிறார் முபினாவின் கணவர் கே நியாஸ் அஹ்மத்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் தோல் தொழிற்சாலையில் மாதம் ரூ.15,000 சம்பளத்துக்கு வேலை பார்த்து வருகிறார் நியாஸ் அஹ்மத். மாதம் ரூ.4,500 வாடகைக்கு அவரும், முபினாவும் அவர்களின் மூன்று பிள்ளைகளுடன் வசித்து வருகின்றனர். மூன்று பிள்ளைகளும் அருகில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர்.

“2012 — ஆம் ஆண்டு என் மனைவிக்கு வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டது. அவரது தந்தை சில ஆண்டுகள் முன்பு அவருக்கு பான் அட்டை எடுத்துக் கொடுத்துள்ளார். ''

''இந்த வங்கிக் கணக்கைப் பயன்படுத்தி கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக எம்.ஆர்.கே எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் தொழில் நடத்தப்பட்டு வந்துள்ளது. ஜி.எஸ்.டி வரி பாக்கி குறித்து வங்கியிடம் புகார் தெரிவித்த போதுதான் இந்த தகவல் எங்களுக்கு தெரிந்தது” என்கிறார் நியாஸ் அஹ்மத்.

வங்கியிலும் காவல் துறையிலும் புகார் அளித்த பின், விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

“எங்கள் கணக்கில் பாக்கி உள்ள வரியை செலுத்த வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. அதே நேரம், கட்ட வேண்டாம் என்று இதுவரை எழுத்துபூர்வமாக கூறவில்லை. வங்கிக் கணக்கு இன்னமும் முடங்கி உள்ளது,” என்றார்.

இதே போன்ற மற்றொரு சம்பவத்தில் சில மாதங்களுக்கு முன்பு, ஆம்பூரில் ஒரு தனியார் காவலாளியின் மனைவிக்கு 6.65 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்துள்ளதாக தகவல் கிடைத்தது. ஒருவரிடம் கடன் பெறும் போது அவரிடம் ஆதார் அட்டையை அடமானம் வைத்துள்ளார்.

ஒரு முறை இலவசமாக பான் அட்டை வாங்கி தருவதாக கூறியவரிடம் ஒரு விண்ணப்பத்தில் தகவல்களை வழங்கியுள்ளார். ஆனால் அவருக்கு பான் அட்டை கிடைக்கவில்லை. பின்னரே, அவருக்கு தெரியாமல் பான் அட்டை வாங்கியதும், அவரது பெயரில் தொழில் நடத்தி வந்ததும் தெரிய வந்தது.

முபினாவின் வழக்கிலும் அவரது ஆதார் மற்றும் பான் அட்டை விவரங்களை பயன்படுத்தி இந்த மோசடி நடந்துள்ளதாக திருப்பத்தூர் மாவட்ட காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.





### 'மோசடிகளுக்கு பின்னால் இயங்கும் நெட்வர்க்'

இந்த வழக்குகளுக்கு பின்னால் இருப்பவை பெரிய நெட்வர்க் என்கின்றனர் இது போன்ற வழக்குகளை கையாண்டு வரும் சைபர் குற்ற வழக்கறிஞர்கள்.

இது ஒரு தனி நபரை குறி வைத்து செய்யப்படுவதில்லை, பல கோடி ரூபாய் மோசடியின் ஒரு சிறு பகுதியே இது என்கின்றனர்.

நூற்றுக்கணக்கான சைபர் குற்ற வழக்குகளை வாதாடியுள்ள வழக்கறிஞர் கார்த்திகேயன் இது போன்ற மோசடி கும்பல் எப்படி இயங்குகிறது என்று விளக்கினார்.

“சாதாரண நபர்களின் ஆதார் அட்டை விவரங்களைப் பெற்று தருவதற்கு ‘ரன்னர்’ (runner) எனப்படுபவர்கள் களத்தில் இருப்பார்கள். ஆதார் அட்டை விவரங்களை பகிர்ந்து கொள்வதற்கு ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை ஒருவருக்கு வழங்குவார்கள். நம்மிடம் என்ன இருக்கிறது இழப்பதற்கு என்று நினைத்து சிலர் தங்கள் ஆதார் விவரங்களை அளிப்பார்கள்."

''பின் அவர்களையே ‘ரன்னர்’ஆக மாற்றி, அவர்களுக்கு தெரிந்தவர்களிடம் இருந்து ஆதார் அட்டை விவரங்களை பெறுவார்கள். பெறப்படும் ஒவ்வொரு ஆதார் அட்டை விவரங்களுக்கும் ஒரு கமிஷன் வழங்கப்படும். இந்த விவரங்களை வைத்து பான் அட்டைக்கு விண்ணப்பித்துக் கொள்வார்கள்” என்கிறார்.

"சிம் கார்டுகளை பெறுவதற்கு தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) விதிமுறைகள்படி, சிம் கார்டை பெறுபவர், லைவ் ஆக நின்று புகைப்படம் எடுத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். சிம் கார்டு ஆக்டிவேட் ஆகி மூன்று நாட்கள் வரை அதற்கு அவகாசம் உண்டு. லைவ் புகைப்படம் பதிவேற்றம் செய்யாவிட்டால், சிம் கார்ட்டு செயலிழந்து விடும். இந்த மூன்று நாட்களுக்குள் வாங்கப்பட்ட சிம் கார்டுகளை கொண்டு வங்கிக் கணக்குகள் தொடங்கப்படும்,” என்கிறார் வழக்கறிஞர் கார்த்திகேயன்.

ஒரு மோசடி கும்பலால் பல அடுக்குகளில் ஆட்களைக் கொண்டு இது திட்டமிட்டு நடைபெறுகிறது என்கிறார் மற்றொரு சைபர் வழக்கறிஞரான ராஜேந்திரன். “இதில் அரசு நடைமுறைகளை தெரிந்த ஒருவர், வங்கி பரிவர்த்தனைகளை நன்கு அறிந்தவர் கண்டிப்பாக இருப்பார்கள். வங்கியில் வேலை செய்பவரும் இதில் சில நேரங்களில் உடந்தையாக இருக்கலாம்” என்கிறார் அவர்.

“சமீப நாட்களில் உத்தர பிரதேச மாநிலம் மதுராவிலிருந்து சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ள சிறு நகரத்திலிருந்து இயங்கும் கும்பலால் ஏமாற்றப்படும் புகார்கள் வருகின்றன. ஏதாவது பிரச்னை ஏற்பட்டால், ஒரு மாநிலத்திலிருந்து உடனே வேறு மாநிலத்துக்கு தப்பி விடுவதற்கு வசதியாக இவர்கள், ராஜஸ்தான், அரியாணா, உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களின் எல்லையில் உள்ள நகரத்திலிருந்து இயங்குகின்றனர். மூன்று மாதங்களில் ஆயிரம் ஆதார் அட்டைகளின் பி.டி.எஃப் நகலை கொடுக்க ஒருவருக்கு பெரிய தொகை கமிஷனாக வழங்கப்படும்” என்றார்.

வங்கிக் கணக்குகளை தொடங்க ஒருவர் நேரில் செல்ல வேண்டும் என்பது சில வங்கிகளில் குறிப்பாக புதிதாக தொடங்கப்படும் தனியார் வங்கிகளில் கட்டாயம் இல்லை என்பதால், எளிதாக வங்கிக் கணக்குகள் தொடங்கப்படுகின்றன என்கிறார் ராஜேந்திரன்.

வங்கிக் கணக்குகளைக் கொண்டு, உடனடி கடன் பெற்று அந்த பணம் வேறு கணக்குக்கு மாற்றப்படும். அல்லது, போலி நிறுவனங்கள் நடத்தவும், பிறரை ஏமாற்றி பணம் முதலீடு செய்ய வைக்கவும் இந்த கணக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. பின் கடனை திருப்பி செலுத்துவதும், ஜி.எஸ்.டி வரி செலுத்துவதும் ஆதார் அட்டைக்கு சொந்தக்காரரின் பொறுப்பாகி விடும்.

### பட்டதாரிகளை ஏமாற்ற மற்றொரு உத்தி

பொதுவாக வங்கிக் கணக்குகளை அதிகம் பயன்படுத்தாதவர்கள், பணத்தின் உடனடி தேவை அதிகம் உள்ளவர்களே இந்த வகையான மோசடிகளில் குறிவைக்கப்படுகின்றனர். பட்டதாரிகள், நடுத்தர வர்க்கத்தினரை குறி வைக்க வேறு சில வழிகள் கையாளப்படுகின்றன.

“சென்னை அண்ணா நகரில் சமீபத்தில், ஐந்து லட்சம் ரூபாயில் ஒரு அலுவலகத்தை அமைத்தார் ஒருவர். அந்த நிறுவனத்தில் பணிபுரிவதற்காக ஆட்களை வேலைக்கு எடுக்க விளம்பரம் வழங்கபட்டது. அதைப் பார்த்து, விண்ணப்பித்தவர்களின் தனிப்பட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டன. சிலரை நேரில் அலுவலகத்துக்கு அழைத்து தங்கள் ஆதார் அட்டை விவரங்களையும் அதிலுள்ள தொலைபேசி எண்ணுக்கு கிடைக்கும் ஓ.டி.பி—யும் அலுவலக காரணங்களுக்காக தேவை என்று கூறி அதை பெற்றுவிட்டனர். பிறகு அந்த விவரங்களைக் கொண்டு வங்கிக் கணக்குகளை தொடங்கி, அதிலிருந்து பண பரிவர்த்தனைகள் மேற்கொண்டனர்” என்று விவரிக்கிறார் வழக்கறிஞர் கார்த்திகேயன்.

இது போன்ற மோசடிகள் வெளிநாடுகளிலிருந்தும் இயக்கப்படுகின்றன என்கிறார் அவர்.

### 'வங்கிகளுக்கு பொறுப்பு உண்டு'

“ஒரு பரிவர்த்தனை சட்டவிரோதமாக இருக்கலாம் என்று வங்கி கருதுவதற்கான காரணங்கள் இருந்தால், அதை கண்காணித்து, சந்தேகிக்கும் வகையிலான பரிவர்த்தனை அறிக்கை (Suspicious Transaction Report) வழங்க வேண்டும். இது ரிசர்வ் வங்கியின் விதி. ஆனால் சில வங்கிகள் கண்காணிப்பதில்லை. ஒருவரின் வங்கிக் கணக்கை பயன்படுத்தி, பல ஆண்டுகளாக ஒருவர் தொழில் நடத்தி வந்திருந்தால், அதை கண்காணிக்காதது கண்டிப்பாக வங்கியின் தவறுதான்” என்கிறார் ராஜேந்திரன்.

முபினாவின் வழக்கு தொடர்பாக திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் கூறுகையில், “தங்கள் ஆதார் மற்றும் பான் அட்டை விவரங்களை பல ஆண்டுகள் முன்பாக சிலரிடம் பகிர்ந்துள்ளனர். அவர்கள் யார், அவர்களுக்கும் இதற்கும் தொடர்பிருக்கிறதா என்று விசாரித்து வருகிறோம். கடந்த ஆண்டு இதே போன்ற இரண்டு வழக்குகள் பதிவாகின. ஏமாற்றப்பட்டவர்கள் ஒருவருக்கு ஒருவர் சம்பந்தம் இல்லாத நபர்கள் என்பது தெரிகிறது. அவர்களிடம் விவரங்களைப் பெற்றவர்கள் தனி நபர்களா, அல்லது ஒரே கும்பலை சேர்ந்தவர்களா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது,” என்றார்.

### சிக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

இது போன்ற மோசடிகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க, துறை சார்ந்த நிபுணர்கள் பொதுமக்களுக்கு வழங்கும் சில அறிவுரைகள் :

உங்கள் பெயரில் எத்தனை செல் போன் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன என்பதை https://tafcop.sancharsaathi.gov.in/ என்ற மத்திய அரசின் தொலைதொடர்பு துறையின் இணையதளத்தில் சரிபார்த்துக் கொள்ளலாம். உங்களுக்கு தெரியாமல் செல்போன் எண் பெறப்பட்டிருந்தால் அந்த இணைய தளத்திலேயே புகார் அளிக்கலாம்.

வங்கிக் கணக்குகளில் என்ன பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை வாடிக்கையாளர் அவ்வபோது சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களை ஏமாற்றி உங்கள் கணக்கிலிருந்து வேறு கணக்குக்கு பணம் மாற்றப்பட்டிருந்தால், உடனே அந்த வங்கிக் கணக்கை முடக்க வங்கிக்கு தெரிவிக்கலாம். அப்படி முடக்கப்பட்டால், அந்த கணக்கிலிருந்து பணத்தை மீண்டும் பெறுவது சட்ட ரீதியாக சாத்தியம். ஆதார், பான் அட்டை விவரங்களை தேவை இல்லாமல் யாரிடமும் வழங்குவதை தவிர்க்கலாம்.

ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்டிருக்கும் செல்போன் எண்ணுக்கு வரும் ஓ.டி.பியை கவனம் இல்லாமல் யாரிடமும் கூறுவதை தவிர்க்க வேண்டும். பொதுவாக வங்கிகள் இந்த ஓ டி பிக்களை கேட்க மாட்டார்கள் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

வீட்டில் முதியவர்கள் பெயரில் ஆதார் அட்டை, பான் அட்டை இருந்தால், அவர்களது வங்கிக் கணக்குகளை அவ்வபோது கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

வங்கிக் கணக்கு முடக்கப்பட்டால், உடனடியாக வங்கியை அணுக வேண்டும்.

# சாராயக்கடையில் போலீசார் சோதனை

## உரிமையாளர்கள் எதிர்ப்பு –முதல்வரிடம் மனு அளிக்க முடிவு!

புதுச்சேரி சாராயக்கடையில் தமிழக போலீஸார் சோதனையிட்டதற்கு சாராயக் கடை உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து கூட்டம் நடத்தினர். பொய் வழக்கு போடுவதாக முதல்வரிடம் மனு அளிக்க உள்ளனர்.



கள்ளக்குறிச்சி எரிசாராயம் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழக போலீஸார் புதுச்சேரி எல்லை பகுதிகளில் சோதனைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

விழுப்புரம் அடுத்த கெங்கராம் பாளையத்தில் தமிழக போலீஸார் நடத்திய வாகன சோதனையில், சாராய பாக்கெட்டுகள் கொண்டு சென்ற நபர் பிடிபட்டார்.

அதன் அடிப்படையில் தமிழக போலீ ஸார் தமிழக எல்லையிலுள்ள புதுச்சேரி திருபுவனை அருகேயுள்ள ஆண்டியார் பாளையம் சாராயக் கடையில் சோதனை நடத்தி, அங்கிருந்த 40 பாக்கெட் சாராயம், பாக்கெட் போடும் மிஷின் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். சாராய விற்பனையாளர் பிரம்மநாதனையும் கைது செய்தனர்.

புதுச்சேரி போலீஸார் அனுமதி இல் லாமல் சாராயக்கடையில் தமிழக போலீ ஸார் சோதனை நடத்தியது தொடர்பாக சாராயக்கடை உரிமையாளர்கள் ஆலோசனை நடத்தினர்.

அதன்பிறகு அவர்கள் கூறியதாவது: தமிழக காவல்துறை புதுச்சேரி சாராயக் கடைகளில் சோதனை செய்து பொய் வழக்கை பதிவு செய்து தொழில் நடத்த விடாமல் செய்கிறார்கள். தொழில் நடத்த முடியாத சூழலை முதல்வரிடம் தெரிவிக்கவுள்ளோம். இதனால் புதுச்சேரி அரசுக்கு வருவாய் வராது, கிஸ்தி கட்டமுடியாது.

புதுச்சேரியில் நாலரை லிட்டர் வரை சாராயம் தரலாம். தற்போது சில பாக் கெட்டுகளை வைத்து உரிமையாளர்கள் மீது தமிழக போலீஸார் வழக்கு பதிந்துள்ளனர். டாஸ்மாக் தமிழகத்துக்கு முக்கியம். அதேபோல்தான் சாராயக் கடை, மதுக்கடைகள் புதுச்சேரிக்கு முக்கியம். தமிழக போலீஸாரால் எங்களுக்கு நெருக்கடியான சூழல் ஏற்படுகிறது.

புதுச்சேரி போலீஸ் இல்லாமல் தமிழக போலீஸார் நேரடியாக நடவடிக்கை எடுப் பது சட்ட விரோதம். புதுச்சேரியில் கள்ளச் சாராயம் இல்லை. தமிழகத்தில் விற்கிறார்கள். அங்கு அதை தடுக்க வேண்டியது தமிழக போலீஸ் கடமை. அதை விடுத்து புதுச்சேரி அரசு உரிமம் உள்ள கடையில் நடவடிக்கை எடுப்பது சரியானது அல்ல. இதற்காக முதல்வர் மற்றும் உள்துறை அமைச்சரை சந்திக்கவுள்ளோம்

இந்த விவகாரத்தில் உரிய முடிவு எடுக்காவிட்டால் கடையை நடத்த முடியாத சூழல் உள்ளது. தமிழக போலீஸரால் பாதிப்பு உள்ளதாக முதல்வரிடம் மனு அளிக்கிறோம் என்றனர்.

# தமிழகத்தில் 9,000-ஐ தாண்டிய புத்தொழில் நிறுவனங்கள்!

தமிழகத்தை வரும் 2030—ம் ஆண்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றும் இலக்கை நோக்கி தமிழக அரசு பயணித்து வருகிறது. இதை முன்னிட்டு, பல்வேறு நடவடிக்கைகள் தொழில்துறை, குறுசிறு நடுத்தரத் தொழில்கள்துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, குறு சிறு நடுத்தரத் தொழில்கள் துறை சார்பில் புத்தாக்க நிறுவனங்களுக்கு தேவையான முதலீட்டு மானியம், கடனுதவி உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றின் காரணமாக, 2021—ம் ஆண்டு வரை தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2032—ஆக இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டி உள்ளது.

தமிழகத்தில் தற்போது 9,038 புத்தொழில் நிறுவனங்கள்பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 7,006 நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. மகளிரால் தற்போது 4,446 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

# வயநாட்டுக்கு நம்பிக்கை பாலம் அமைத்த மேஜர் சீதா ஷெல்கேவம்

கேரளாவில் வயநாடு பகுதியில் பெய்த கனமழை காரணமாக அடுத்தடுத்து 3 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மண்ணில் புதைந்தனர். இங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 340—ஐ தாண்டிவிட்டது. 24 மணி நேரமும் மீட்பு பணிகளில் பாதுகாப்பு படைகள் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. நிலச்சரிவின் காரணமாக காரணமாக பல இடங்கள் துண்டிக்கப்பட்டது. குறிப்பாக, சூரல்மலா — முண்டக்கை பகுதியை இணைக்கும் முக்கிய பாலம் துண்டிக்கப்பட்டதால் முண்டக்கை தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக மாறியது. அங்கு மீட்புக் குழு செல்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டன.

இதனையடுத்து, மீட்பு பணியை விரைந்து மேற்கொள்ள ‘பெய்லி’ எனப்படும் தற்காலிக பாலங்களை அமைக்க ராணுவத்தினர் முடிவு செய்தனர். இதற்கான உபகரணங்கள் டெல்லி மற்றும் பெங்களூருலிருந்து விமானங்கள் மூலம் கண்ணூர் விமான நிலையம் கொண்டு வரப்பட்டு, பின்னர் 17 லாரிகள் மூலம் வயநாடு கொண்டுவரப்பட்டு, தற்காலிக பாலங்கள் அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்றது.

**பெய்லி பாலம் என்றால் என்ன?**

இந்த பெய்லி பாலம் கடந்த 1940—41—ம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டு இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்டது. இதன் பாகங்களை எளிதில் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு சென்று தற்காலிக பாலம் அமைக்க முடியும். இந்தப் பாலம் ராணுவப் பணிகளுக்கும், இயற்கை பேரிடர் ஏற்படும் இடங்களிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகிறது. இங்கிலாந்து பாதுகாப்பு துறையில் பணியாற்றிய டொனால்ட் பெய்லி என்பவர்தான் இந்தப் பாலத்தை உருவாக்கினார். இந்த பெய்லி பாலம் ராணுவ டாங்க்குகளின் எடையையும் தாங்கக் கூடியது.

**மெட்ராஸ் சாப்பர்ஸ் அல்லது தம்பிகள்:**


மெட்ராஸ் சாப்பர்ஸ் என அழைக்கப்படும் ராணுவத்தின் மெட்ராஸ் இன்ஜினியரிங் படைப்பிரிவு இந்த பெய்லி பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டது. மெட்ராஸ் சாப்பர்ஸ் என்பது இந்திய ராணுவத்தின் ஒரு பொறியாளர் குழு. இந்த குழுவை தம்பிகள் குழு என்றும் அழைக்கின்றனர். இக்குழு, ஆங்கிலேய ஆட்சியின் பழைய மெட்ராஸ் பிரசிடென்சி ராணுவத்தில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் தற்போது பெங்களூருவில் உள்ளது. 200 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது ராணுவத்தின் இந்த பிரிவு.














மெட்ராஸ் சாப்பர்ஸின் 144 பேர் கொண்ட குழு இரவு, பகலாக தற்காலிக பெய்லி பாலத்தை அமைத்து தற்போது வயநாட்டில் மீட்புப் பணியை எளிமைப் படுத்தியுள்ளது. 144 பேர் கொண்ட குழுவில் இடம்பெற்றிருந்த பெண் மேஜர் சீதா அசோக் ஷெல்கே. மகாராஷ்டிராவின் அகமதுநகர் காதில்கான் கிராமத்தைச் சேர்ந்த 35 வயதான சீதா ஷெல்கே தனது செயல்பாடுகளுக்காக வயநாட்டு மக்களால் தற்போது பாராட்டப்பட்டு வருகிறார்.

மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ள இவர், ராணுவத்தில் இணைய வேண்டும் என்பதை கனவாக கொண்டு அதற்கான தேர்வை எழுதி மெட்ராஸ் சாப்பர்ஸ் குழுவில் சேர்ந்தார். வயநாடு அவருக்கான முதல் பணி கிடையாது. 2015—ம் ஆண்டு ஜம்மு—ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் இதேபோல் ஒரு சூழ்நிலையில் தனது முதல் பணியை மேற்கொண்டார். இதன் பின் தொடர்ச்சியாக பேரிடர் மீட்புப்பணியில் இணைந்து மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டார். இவரின் அசாத்திய பணி அனுபவம் தற்போது வயநாடு மக்களையும் மீட்க உதவிகரமாக இருந்தது.

வயநாடு மீட்புப் பணிகள் குறித்து ஊடகங்களுக்கு பேசியுள்ள மேஜர் சீதா ஷெல்கே, “பெய்லி பாலம் அமைப்பதில் பல சவால்கள் இருந்தன. எனினும் இதுபோன்ற சூழல்களை எதிர்கொள்ள நாங்கள் முறையான பயிற்சி பெற்றுள்ளோம். வயநாடு நிலச்சரிவு சேதங்களை கண்டபோதே எங்களால் ஓய்வெடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டோம். அதற்கேற்ப எங்கள் வீரர்கள் உத்வேகத்துடன் பணியாற்றினர்.

அனைத்து பாதகமான சூழலையும் சகித்துக்கொண்டு 48 மணி நேரம் இடைவிடாமல் பணிபுரிந்தோம். பாலத்தின் கட்டுமானத்தை விரைவில் முடித்து மக்களை மீட்பதில் தான் எங்களின் முழு கவனமும் இருந்தது. அதனை சாத்தியப் படுத்தியுள்ளோம். எங்கள் படைப்பிரிவில் ஆண்கள், பெண்கள் என்று எதுவும் இல்லை. இதுபோன்ற பெரிதா சூழ்நிலைகளை சமாளிக்க பயிற்சி பெற்ற வீரர்கள் நாங்கள். நாங்கள் எந்த சலுகைகளையும் எதிர்பார்க்க மாட்டோம்" என்று கூறியுள்ளார்.

# மேற்கு தொடர்ச்சி மலையின் 56,800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு சூழலியல் பாதுகாப்பு பகுதி - மத்திய அரசின் வரைவு அறிக்கையில் தகவல்!

கேரளா, கர்நாடகா, தமிழகம், மகாராஷ்டிரா, கோவா, குஜராத் என 6 மாநிலங்களில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் 56,800 சதுர கி.மீ. சூழலியல் பாதுகாப்பு பகுதி (Ecologically Sensitive Area - ESA) என மத்திய அரசின் வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஜூலை 30 ஆம் தேதி கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் 340—க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இன்னும் 200—க்கும் அதிகமானோரைக் காணவில்லை. மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

இந்நிலையில், கேரளாவில் 9,994 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலான நிலப்பகுதியை சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பாணை கடந்த ஜூலை 31 ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. வயநாடு நிலச்சரிவு நடந்த அடுத்த நாள் வெளியிடப்பட்டுள்ளதோடு அதன் மீது மேற்குத் தொடர்ச்சி மலைகள் உள்ள தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத் உள்ளிட்ட 6 மாநிலங்கள் அடுத்த 60 நாட்களுக்குள் விளக்கம் அளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிக்கையில் குஜராத்தின் 449 சதுர கிலோமீட்டர், மகாராஷ்டிராவில் 17,340 சதுர கிலோமீட்டர், கோவாவின் 1,461 சதுர கிலோ மீட்டர், கர்நாடகாவின் 20,668 சதுர கிலோ மீட்டர், தமிழ்நாட்டின் 6,914 சதுர கிலோமீட்டர், கேரளாவின் 9,993.7 சதுர கிலோ மீட்டர் என மொத்தம் 56,800 சதுர கி.மீ பரப்பளவிலான பகுதிகள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் வனத்துறை டிஜிபி சஞ்சய் குமார் தலைமயில் 5 பேர் கொண்ட குழு மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் பணியின் நிமித்தமாக



இந்த வரைவு அறிக்கையை தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசால், 2022 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தக் குழு, அதே ஆண்டில் அக்டோபர் மாதம் முக்கிய ஆலோசனைக் கூட்டம் மேற்கொண்டது. இந்தக் குழுவானது வரும் செப்டம்பர் மாதம் தனது பரிந்துரைகள் கொண்ட இறுதி அறிக்கையை தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளானது யுனஸ்கோவின் சர்வதேச பாரம்பரிய சின்னங் களில் ஒன்று. மேலும் இவை உலகின் மிகவும் பிரதானமான பல்லுயிர் பரவல் கொண்ட பகுதிகளில் ஒன்றாகவும் அறியப்படுகிறது.

வரைவு அறிக்கையின் பரிந்துரைகள்.. சூழலியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி களில் சுரங்கம் தோண்டுதல், குவாரி அமைத்தல், மணல் அள்ளுதல் ஆகியனவற்றிக்கு முழுமை யாக தடை விதிக்க வரைவு அறிக்கையில் பரிந் துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஏற்கெனவே இயங்கும் சுரங்கங்கள் குத்தகை காலாவதியாகும் நாளில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் மூடவும் பரிந்துரைத்துள்ளது.

மேலும் வரைவு அறிக்கையில், மேற்குத் தொடர்ச்சி மலையின் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பெரிய அளவிலான கட்டுமானங்களுக்கு தடை, புதிய நீர்நிலைகள் அமைக்கத் தடை என பல் வேறு பரிந்துரைகளை வகுத்துள்ளது. இருப்பி னும் குடியிருப்புகள் அமைக்க தடை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2013 ஆம் ஆண்டு டாக்டர் கே.கஸ்தூரிரங்கன் குழு சார்பில் மேற்குத் தொடர்ச்சி மலைக் கான பாதுகாப்பு பரிந் துரைகள் வெளியிடப் பட்டது. அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு மாதவ் காட்கில் அறிக்கையும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் பாதுகாப்பு அறிக்கையை வெளியிட்டது.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட கஸ்தூரிரங்கன் அறிக்கையின் பரிந்துரைகள் பின்பற்றப்பட்டிருந்தால் நிச்சயமாக இந்த பேரிடர் ஏற்பட்டிருக்காது என்ற குரல்கள் ஒலித்து வரும் நிலையில் தான் மேற்குத் தொடர்ச்சி மலை பாதுகாப்பு தொடர்பான 6—வது வரைவு அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்!**

# சென்னையில் ஞாயிறுதோறும் இயற்கை உழவர் சந்தை

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு இயற்கை வேளாண் கூட்டமைப்பு, சென்னை ஆர்கானிக் ஃபார்மர்ஸ் மார்க்கெட் இணைந்து மாதாந்திர இயற்கை உழவர் சந்தையை சென்னையில் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இச்சந்தையில் இயற்கை விவசாயிகள், மகளிர்க் குழுக்கள், சமூக நிறுவனங்கள் சார்பாக 20 அரங்குகள் இடம் பெறவுள்ளன. இயற்கைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், ஆர்கானிக் மளிகைப் பொருள்கள், மரபு அரிசி, சிறுதானியங்கள், பருப்பு வகைகள், செக்கிலாட்டிய எண்ணெய் போன்ற பொருள்கள் விற்பனைக்கு உள்ளன.

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள், பருத்தி ஆடைகள் , சுற்றுச்சூழலுக்கு உகந்த வீட்டு உபயோகப் பொருள்கள், தின்பண்டங்கள், மூலிகைத் தேநீர், பானங்களும் இச்சந்தையில் கிடைக்கும்.

சென்னை ஆகஸ்ட் 4ஆம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள சி.எஸ்.ஐ. பெயின் பள்ளி வளாகத்தில் முதல் இயற்கைச் சந்தை தொடங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமை இதே இடத்தில் இச்சந்தையைத் தொடர ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தொடக்க நிகழ்வில் இயக்குநர் வெற்றிமாறன், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி சாந்த ஷீலா, இயற்கை விவசாயி அரியனூர் ஜெயச்சந்திரன், இயற்கை விவசாயப் பயிற்சியாளர் ஆர். வெற்றிமாறன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.


இத்துடன் இயற்கை வேளாண்மை, சுகாதாரம், சுற்றுச்சூழல் குறித்து முக்கிய நிபுணர்களின் அமர்வுகள், பயிலரங்குகள், குழந்தைகளுக்கான அரங்குகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சந்தையானது பிளாஸ்டிக் இல்லா (ஞெகிழியற்ற), ஜீரோ—வேஸ்ட் நிகழ்வாக இருப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால் வாடிக்கையாளர்கள் பைகள், சொந்தக் கொள்கலன்களைக் கொண்டுவர நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்புக்கு: 99620 43710 / 89391 38207



# தமிழ்நாட்டில் பட்டியலினத்தோர் மீதான தாக்குதல் அதிகரிக்கிறதா? புள்ளி விவரம் சொல்வது என்ன?



தமிழ்நாட்டில் பட்டியலினத்தோர் மீதான குற்றங்கள் அதிகரித்திருப்பதாக சமீபத்தில் வெளியிடப்பட்ட நிடி ஆயோக்கின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு என்ன காரணம்?

கடந்த சில நாட்களுக்கு முன்பாக 2023—24ஆம் ஆண்டிற்கான நிலைத்த வளர்ச்சி இலக்கு குறியீட்டு தர வரிசைப் பட்டியலை (Sustainable Development Goals Index 2023-24) இந்தியாவின் கொள்கைகளை வகுக்கும் சிந்தனைக் குழுவான நிடி ஆயோக் வெளியிட்டது. இந்தப் பட்டியல் பல்வேறு குறியீடுகளின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள மாநிலங்களை தர வரிசைப் படுத்தியுள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியலில் மாநிலங்களை ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்ய 57ல் இருந்து 79வரை மதிப்பெண்கள் அளிக்கப்பட்டன. அதன்படி உத்தராகண்ட், கேரளா ஆகிய மாநிலங்கள் 79 மதிப்பெண்களைப் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளன. 78 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

அதேபோல, ஏழ்மையை ஒழிப்பது என்ற இலக்கில் 92 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. அதற்கு அடுத்த இடங்களில் தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இருக்கின்றன.

கல்வியைப் பொறுத்தவரை பல குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. 18 — 23 வயதுக்குட்பட்டவர்களில் 28.4 சதவீதத்தினர் உயர்கல்வி பயிலச் செல்கின்றனர். ஆனால், இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 47 சதவீதம் பேர் உயர்கல்வி பயிலச் செல்கின்றனர்.

பள்ளிக்கூடங்களில் மின்சாரம், குடிநீர் வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்புகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு, கோவா ஆகிய இரு மாநிலங்களில்தான் 100 சதவீத பள்ளிகளில் இவை இருக்கின்றன. இந்திய அளவில் மேல்நிலைப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 92.2 சதவீத பள்ளிகளில்தான் இருக்கின்றனர். ஆனால், தமிழ்நாட்டில் இந்த சதவீதம் 99.9ஆக இருக்கிறது.

ஆனால், சில குறியீடுகளில் முந்தைய மதிப்பெண்களில் இருந்து சற்று பின்னடைவைச் சந்தித்திருக்கிறது தமிழ்நாடு. குறிப்பாக, தற்கொலை செய்து கொள்வோர் விகிதம் ஒரு லட்சத்திற்கு 17.8 ஆக இருந்தது, தற்போது 25.9ஆக அதிகரித்திருக்கிறது. சாலை விபத்துகளில் இறப்போர் விகிதமும் ஒரு லட்சத்திற்கு 13ஆக இருந்தது, தற்போது 23ஆக உயர்ந்திருக்கிறது. இந்திய அளவில் வாகன விபத்தில் இறப்போர் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு 12 தான்.

மிக முக்கியமாக பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் மீதான குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன. இதற்கு முன்பு வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில், பட்டியலினத்தோர் மீதான குற்றங்கள் ஒரு லட்சம் பேருக்கு 7.9 குற்றம் என்ற அளவில் பதிவானது.

ஆனால், தற்போது அந்த எண்ணிக்கை 12.2ஆக அதிகரித்துள்ளது. அதேபோல பழங்குடியினர் மீதான குற்றங்களைப் பொறுத்தவரை ஒரு லட்சம் பேருக்கு 3.9ஆக இருந்தது தற்போது 8.4ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய அளவைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம்.

குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் கொலை, கடுமையாகத் தாக்குவது போன்ற கொடுங்குற்றங்கள் கடுமையாக அதிகரித்திருப்பதாகச் சொல்கிறார் எவிடன்ஸ் அமைப்பின் கதிர்.

"கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 சதவீதம் அளவுக்கு பட்டியலினத்தோருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன. எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை வழக்குகளை கொடூர குற்றம், சாதாரண குற்றம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொடும் குற்றங்கள் 4 மடங்கு அதிகரித்துள்ளன. இந்த எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு இரு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, உண்மையிலேயே குற்றங்கள் அதிகரித்திருக்கலாம். அல்லது குற்றங்கள் காவல் நிலையத்தில் பதிவாவது அதிகரித்திருக்கலாம்" என்கிறார் கதிர்.

ஆனால், வலதுசாரி சக்திகளின் எழுச்சிதான் இப்படி வன்முறை அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் என்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரான து. ரவிக்குமார்.

"தமிழ்நாட்டில் பட்டியலினத்தோர் மீதான தாக்குதல் மூன்று ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது என்பது உண்மைதான். பட்டியலினத்தோர் மீதான வன்முறை அதிகரிப்பதற்கான காரணங்களைப் பொறுத்தவரை, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையா என்று கேட்கலாம் அல்லது வேறு காரணங்கள் இருக்கின்றனவா என்றும் ஆராயலாம்" என்கிறார் ரவிக்குமார்.

ஆனால், தண்டனைகள் தாமதமாவது இத்தகைய சக்திகளை ஊக்குவிக்கிறது என்கிறார் எவிடன்ஸ் கதிர்.

"தமிழ்நாட்டில் ஆண்டுக்கு சாதி சார்ந்து மட்டும் 60 கொலைகள் நடக்கின்றன. 116 தலித் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவ்வளவு கொடூரக் குற்றங்கள் நடக்கும்போது தண்டனை அவ்வளவு சீக்கிரம் கிடைப்பதில்லை. இதுபோன்ற வன்கொடுமை வழக்குகளில் 3 மாதங்க ளில் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்து மூன்று மாதங்களில் வழக்குகளை முடிக்க வேண்டும். ஆனால், சட்டத்தை செயல்படுத்துவது மிக பலவீனமாக இருக்கிறது" என்கிறார் கதிர்.

ஆனால், வன்கொடுமைகள் அதிகரிப்பதற்கு அரசை மட்டும் குற்றம் சுமத்த முடியாது என்கிறார் 'தலித் முரசு' இதழின் ஆசிரியரும் தமிழ்நாடு எஸ்சி, எஸ்டி ஆணைய துணைத் தலைவருமான புனிதபாண்டியன்.

"ஒரு வன்கொடுமை நடக்கும் நிலையில் அது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதற்கான எல்லாப் பொறுப்பையும் அரசின் மீது மட்டும் சுமத்திவிட முடியாது. சாதியின் வெளிப்பாடான வன்கொடுமைகள் நிகழாமல் தடுப்பதற்கான பொறுப்பு, அரசுக்கும் சிவில் சமூகத்திற்கும் இருக்கிறது. சாதியை நிலைநிறுத்துவதில் சமூகம், குடும்பம், பண்பாடு, மதம், அடிப்படைவாத அமைப்புகள் போன்றவை முக்கியப் பங்காற்றுகின்றன. இவற்றைக் கேள்விக்குள்ளாக்காமல் அரசை மட்டுமே குற்றம் சுமத்துபவர்கள், அவ்வரசின் நிர்வாகத்திலும் காவல் துறையிலும் தலித் மக்களின் பிரதிநிதித்துவமும் உள்ளடங்கி இருப்பதை கவனிக்கத் தவறிவிடுகின்றனர்"

"தீண்டாமையின் அனைத்து வடிவங்களும் சட்டத்தால் தடை செய்யப் பட்டிருப்பினும் பொதுச் சமூகம் அதை அங்கீகரிக்காததால்தான் தீண்டாமை வன்கொடுமைகள் அதிகரிக்கின்றன. சாதிய சமூகத்தைக் கண்டிக்காமல் அரசை மட்டுமே பொறுப்பாக்குவது, ஒருபோதும் தீர்வைத் தராது. சமூகம் எல்லா மட்டங்களிலும் ஒதுக்கி வைத்திருக்கப்படும்போது, வன்கொடுமை நடக்கும்போது மட்டும் அந்த விவகாரம் பேசப்படுகிறது. எப்போது பார்த்தாலும் அரசு என்ன செய்கிறது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால், சமூகம் எல்லா மட்டத்திலும் ஜனநாயகத் தன்மை இல்லாமல் இருக்கிறது. அதன் விளைவாகத்தான் வன்கொடுமைகள் நடக்கின்றன. ஆகவே, சமூக ரீதியான பிரச்சனைக்கு அரசிடம் மட்டும் தீர்வைத் தேடக்கூடாது. சமூகம் மாற வேண்டும்" என்கிறார் புனிதபாண்டியன்.

# ஸ்மார்ட்போன் பயன்பாட்டால் இந்தியாவில் 80 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்-ஐ.நா. பாராட்டு!

ஸ்மார்ட்போன் பயன்பாடு காரணமாக இந்தியாவில் 80 கோடி பேர் வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டுள்ளதாக ஐ.நா. பொதுச் சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு "தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான பசியற்ற முன்னேற்றத்தை துரிதப்படுத்துதல்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு டென்னிஸ் பிரான்சிஸ் பேசியதாவது: கடந்த 5—6 ஆண்டுகளில் 80 கோடி மக்களை வறுமையில் இருந்து வெளியேற்றி இந்த திசையில் இந்தியா வேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. இதற்கான முன்னெடுப்பு பணிகளுக்காக இந்தியாவுக்கு பாராட்டுகளை தெரிவிக்கிறேன்.



இந்திய கிராமப்புறங்களில் உள்ள மக்கள் ஸ்மார்ட்போன் மூலம் பணத்தை செலுத்தவும், பெறவும் ஆர்வம் காட்டுகின்றனர். ஸ்மாட்போன் பயன்பாட்டால்தான் இத்தனை கோடி பேரை வறுமையிலிருந்து மீட்க இந்தியாவால் முடிந்துள்ளது. ஆனால், இது போன்ற டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை ஏனைய தெற்காசியாவின் பல நாடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி அமைப்புடன் ஒருபோதும் தொடர்பில்லாத இந்திய கிராமப்புற விவசாயிகள் இப்போது தங்கள் அனைத்து வணிகங்களையும் தங்களது ஸ்மார்ட்போனில் செய்து முடிக்கின்றனர். இதற்கு, இணைய பரவலாக்கம் முக்கியமானதாக உள்ளது. இந்தியாவில் அநேகமாக எல்லோரிடத்திலும், ஸ்மார்ட்போனும், இணைய இணைப்பும்உள்ளது. அவர்கள் வறுமையிலிருந்து மீள்வதற்கு ஏதோ ஒரு வகையில் அது உதவுகிறது. இதேபோல வறுமையிலிருந்து மீள, பிற நாடுகளும் டிஜிட்டல் மயமாக்கத்துக்கு அதிக முன்னுரிமை தர வேண்டும். இவ்வாறு டென்னிஸ் பிரான்சிஸ் பேசினார்.

**உலகளவில் முன்னிலை**

கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் டிஜிட்டல்மயமாக்கல் என்பது பிரதமர் நரேந்திர மோடி அரசின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக உள்ளது. இதனால், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா உலகளவில் முன்னிலையில் உள்ளது. ஜன்தன், ஆதார் மற்றும் மொபைல் ஆகியவற்றை ஒன்றோடு ஒன்று இணைப்பதன் மூலமாக இந்த சாதனை சாத்தியமாகியுள்ளது. இதனால், பல்வேறு அரசு மற்றும் சமூக நல திட்டங்கள் மக்களை நேரடியாக சென்றடைவது உறுதி செய்யப்படுகிறது.

# நாட்டு மக்கள் அனைவரும் தேசியக்கொடியை வீடுகளில் ஏற்றுமாறு அமித்ஷா வேண்டுகோள்!

நாட்டு மக்கள் அனைவரும் வரும் 9—ம் தேதி முதல் 15—ம் தேதி வரை மூர்வணக் கொடியை தங்கள் வீடுகளில் ஏற்றுமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வேண்டுகோள் விடுத்க்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நமது தேசியக் கொடியான மூர்ணக்கொடி தியாகம், விசுவாசம் மற்றும் அமைதியின் சின்னமாகும். சுதந்திர தினத்தை ஒட்டி நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2 ஆண்டுகளாக முன்வைத்து வருகிறார். இதன் காரணமாக இது ஒரு மக்கள் இயக்கமாக பரிணமித்துள்ளது.




மூர்ணக் கொடியை ஏற்றும் இந்த நிகழ்வு சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட மாவீரர்களை நினைவுகூர்கிறது. தேசம்தான் முதலில் என்ற உறுதிமொழியை எடுக்க நமக்கு உத்வேகம் அளிக்கிறது. தேசிய ஒற்றுமையை மேம்படுத்துகிறது. இதற்காக மேற்கொள்ளப்படும் #HarGharTiranga பிரச்சாரம் தேசத்தின் நீள அகலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு இந்தியனின் அடிப்படை ஒற்றுமையை எழுப்புகிறது.

இந்த இயக்கத்தை மேலும் வலுப்படுத்தவும், மீண்டும் அதே ஆர்வத்துடன் இதில் பங்கேற்கவும் அனைத்து குடிமக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். நமது பெருமை, நமது மூர்ணக் கொடி. வரும் 9ம் தேதி முதல் 15ம் தேதி வரை மூர்வணக்கொடியை நீங்கள் உங்கள் வீடுகளில் ஏற்றி, மூர்ணக்கொடியுடன் செல்ஃபி எடுத்து, அதனை https://hargartiranga.com என்ற இணையதளத்தில் பதிவேற்றுங்கள்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதே கோரிக்கையை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் முன்வைத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள எக்ஸ் பதிவில், "பிரதமர் நரேந்திர மோடியின் கோரிக்கையின் பேரில் பேரில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சுதந்திர தினத்தை முன்னிட்டு #HarGharTiranga பிரச்சாரத்தில் அனைத்து இந்தியர்களும் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சகத்துடனும் பங்கேற்று வருகின்றனர்.

இம்முறையும் ஆகஸ்ட் 9 முதல் ஆகஸ்ட் 15 வரை உங்கள் இல்லங்களில் இந்தியாவின் பெருமை மற்றும் புகழின் அடையாளமான தேசியக் கொடியை மிகுந்த மரியாதையுடன் ஏற்ற வேண்டும். நீங்கள் அனைவரும் உங்கள் வீட்டில் 'மூவர்ணக் கொடியை' ஏற்றுவதுடன் செல்ஃபி எடுத்து http://hargartiranga.com என்ற இணையதளத்தில் பதிவேற்றவும். இந்த பிரச்சாரத்தில் நீங்கள் பங்கேற்பதோடு, மற்றவர்களையும் இதில் பங்கேற்க ஊக்குவிக்கவும்" என கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் எஸ். ஜெய்சங்கர், கிரண் ரிஜிஜு, கஜேந்திர சிங் ஷெகாவத் என பலரும் இதே கோரிக்கையை தங்கள் எக்ஸ் பக்கத்தின் மூலம் முன்வைத்துள்ளனர்.

# தண்ணீரை சேமித்தல் கருப்பொருளை மையமாகக் கொண்டு 4000 மாணவிகள் ஆடிப்பெருக்கு கொண்டாட்டம்!

ஆகஸ்ட் 3 ஆடிப்பெருக்கு. நதிகளுக்கு நன்றி தெரிவிக்கும் விழா டாக்டர் எம்.ஜி.ஆர்—. ஜானகி மகளிர் கல்லூரியில் 4 ஆயிரத்து—க்கும் மேற்பட்ட மாணவிகள் எழுச்சியோடு கொண்டாடினர். தமிழர் பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்ட இந்த நிகழ்ச்சியில் மாணவிகள், பாவாடை தாவணி, சேலை அணிந்து பங்கேற்றனர்.

9 வகையான தானியங்கள் கொண்ட மண் பானைகளை ஏந்தி, 'முளைப்பாரி' வழிபாட்டில் பங்கேற்றனர். — கல்லூரி வளாகத்தில் உள்ள சிறு குளத்தில் மாணவிகள் அகல் விளக்குகளில் தீபம் ஏற்றி மிதக்க விட்டனர்.

எலுமிச்சை, புளி, தேங்காய் சாதம் என விதவிதமான சாதங்கள் அடங்கிய ‘சித்ரா அன்னம்’ மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட பிற தின்பண்டங்களை பகிர்ந்துண்டு மாணவிகள் மகிழ்ந்தனர்.

‘நீரைச் சேமித்தல்’ என்கிற கருப்பொருளை மையப்படுத்தி மாணவிகளின் ‘கும்மியாட்டம்’ உட்பட பல கிராமிய நடன நிகழ்ச்சி நடைபெற்றது. ஒருவரது கைகள் அல்லது இடுப்பைப் பிடித்துக்கொண்டு வட்டமாக குனிந்து நிமிர்ந்து ஆடுவது ‘கும்மியாட்டம்’, உலகின் பழமையான தாள வாத்தியங்களில் ஒன்றான 'தப்பு'வின் தாள அடிகளுடன் ஆடப்படும் 'தப்பட்டம்'; குழு நடனத்தின் மற்றொரு பிரபல வடிவமான ‘ஒயிலாட்டம்’; மயில் போன்று ஆடப்படும் நடனமான ‘மயிலாட்டம்’; தமிழ்க் கடவுளான முருகப் பெருமானுக்கு ஆடப்படும் ‘காவடி ஆட்டம்’ ஆகிய நாட்டுப்புற நடனங்களை ஆடினர்.

இது குறித்து கல்லூரியின் தலைவர் குமார் ராஜேந்திரன் கூறுகையில், “நதிகள் செழிப்பின் ஆதாரங்கள், அதிலும் குறிப்பாக விவசாயிகளுக்கு மிக முக்கியமானவை. ஆடிப்பெருக்கு போன்ற விழாக்கள் பழங்காலத்திலிருந்தே தமிழ் கலாச்சாரத்தில் நதிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகின்றன. இருந்தபோதும், உலகம் முழுவதும் பரவியுள்ள சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் கருத்தில் கொண்டு, நதிகள் மற்றும் பிற நீர்நிலைகள் மீதான மரியாதை, கடந்த காலத்தைவிட இன்றைக்கு மிக அதிகமாக தேவைப்படுகிறது. எனவே, எங்கள் கல்லூரியில் ஆடிப்பெருக்கு விழாவை ஏற்பாடு செய்து நீர் பயன்பாடு, நீர்நிலைகளின் பாதுகாப்பு, அவற்றுக்குப் புத்துயிர் அளித்தல் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் அந்த விழாவுடன் தொடர்புடைய கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாணவிகளை ஊக்குவிக்கிறோம்" என்றார்.

# மாணவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் 2023 — 2024 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவ, மாணவியர் மற்றும் 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "உங்களை பார்க்கும் பொழுது அதே உற்சாகம் எங்களுக்கும் வந்துள்ளது. திராவிட இயக்கத்தில் இருந்து வரும் ஒவ்வொரு தொண்டனுக்கும் படிக்கின்ற மாணவர்களை பார்த்தால் ஒரு மகிழ்ச்சி வரும். தந்தை பெரியார் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு காரில் போய்க்கொண்டிருந்த போது அப்போது அந்தச் சாலையில் பள்ளிச் சீருடை அணிந்து கொண்டு பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு சென்று கொண்டிருந்ததை பார்த்து, ஒரு சின்ன குழந்தையை போல உற்சாகமாக பெண் குழந்தைகளை பார்த்து கைதட்டி ரசித்து மகிழ்ந்தார், இதற்கு தானே நான் காலம் முழுவதும் போராடினேன், திராவிட இயக்கத்தின் பலனை இதோ என் கண்ணாலையே பார்த்து விட்டேன் என்ற மகிழ்ச்சி தான் தந்தை பெரியாரை மகிழ்ச்சியில் துள்ள செய்தது...



பள்ளிக்குச் சென்ற மாணவிகளை பார்த்து தங்கள் பெரியார் மகிழ்ச்சி அடைந்தார். கலைஞர் ஆட்சிக்கு வந்த பொழுது மாணவ மாணவிகள் பள்ளிக்கு நடந்து செல்லக் கூடாது என்பதற்காக இலவச பேருந்து அட்டையை வழங்கி, பேருந்தில் போக வைத்தார். தந்தை பெரியாருக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சி தான் இன்று இங்கு வந்துள்ள மாணவர் செல்வங்களை பார்க்கும் போது, எங்கள் அத்தனை பேருக்கும் ஏற்படுகிறது. இந்த மகிழ்ச்சி அனைத்து நாளிலும் தொடர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சரின் ஒரே இலட்சியம்.

நம்முடைய குழந்தைகள் அனைவரும் பள்ளிப்படைப்பை நன்றாக படிக்க வேண்டும், பள்ளிப்படிப்பை முடிக்கின்ற அத்தனை மாணவர்களும் பள்ளிப்படிப்பு மட்டும் பத்தாது, உயர் கல்வியிலும் சேர வேண்டும். மருத்துவர்களாக, ஆராய்ச்சியாளர்களாக, அரசு அதிகாரிகளாக, பெரிய பெரிய பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் திராவிட மாடல் அரசின் ஒரே லட்சியம்.அதற்கு ஏற்றவாறு தான் நம்முடைய முதலமைச்சர் பல திட்டங்களை தந்து கொண்டிருக்கிறார்...

முதலமைச்சர் அரசு பள்ளி, தனியார் பள்ளி என்று பிரித்துப் பார்ப்பது கிடையாது. தனியார் பள்ளிகளில் இருக்கும் அத்தனை வசதிகளும் அரசு பள்ளிகளுக்கும் வரவேண்டும் என்பதற்காக தான் ஒவ்வொரு திட்டத்தையும் முதலமைச்சர் பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாடு கல்வியில் முன்னேறிய மாநிலமாக இருக்கிறது என்றால் அதற்காக நம்முடைய திராவிட மாடல் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தனியார் பள்ளிகள் அளிக்கும் ஒத்துழைப்பு மிக மிக முக்கியமானது...

இன்று பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிகளில் சேராமல் இருக்கு மாணவர்கள் அவர்களை உயர்கல்வியில் சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய அரசு தனி முயற்சி எடுத்து வருகிறது. அதைப்போல் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு இந்த அரசு அனைத்து வகைகளிலும் உதவ தயாராக இருக்கிறது. விளையாட்டுத்துறையில் சாதிக்கும் திறமையாளர்களுக்கு உதவிட இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாடு அரசு தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன் என்ற அறக்கட்டளை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த அறக்கட்டளை மூலம் நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு இதுவரை ஒரு வருடத்தில் ரூபாய் பத்து கோடி அளவில் உயரிய ஊக்கத் தொகை நிதி உதவி வழங்கப்படுகிறது...

சர்வதேச தேசிய அளவிலான போட்டிகளில் சாதிக்கின்ற மாணவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கி தமிழ்நாடு அரசு கவுரப்படுத்தி ஊக்கப்படுத்தி வருகிறது. இன்று பாராட்டு சான்றிதழ் பெற்றுள்ள பள்ளி மாணவர்கள் நாளை தமிழ்நாட்டிற்கு பெருமை சார்க்கும் வகையில் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பல்வேறு பதக்கங்களையும் கோப்பைகளைப் பெற வேண்டும். அதற்கு என்னென்ன தேவையோ அதை செய்ய தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

மாணவர்கள் உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் மட்டும் நன்றாக கவனம் செலுத்துங்கள். படிப்பு என்றால் பாடத்தில் இருப்பதை மட்டுமே மனப்பாடம் செய்து மதிப்பெண் வாங்குவது கல்வி என்று கிடையாது. உண்மையான படிப்பு என்றால் பாடத்தில் உள்ளதை நன்றாக புரிந்து கொண்டு படிக்க வேண்டும். அறிவை பயன்படுத்துபவர்களுக்கு மட்டும் அனைத்து இடங்களிலும் மரியாதையும் சிறப்பும் தானாக கிடைக்கும், அறிவை பயன்படுத்தாமல் இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சென்னையில் திறந்து வைத்தார்கள், நம்முடைய அமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார்.

10 லட்சத்திற்கும் அதிகமான வாசகர்கள் அந்த நூலகத்திற்கு சென்று படித்துள்ளனர், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கலைஞர் நூலகத்திற்கு மாணவர்கள் படையெடுக்கிறார்கள். விரைவில் கோவையிலும் திருச்சியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைய உள்ளது. கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் படி வறுமையில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு தனியார் பள்ளிகளில் 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தச் சட்டத்தின்படி சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வித் கட்டணத்தை ஆண்டுதோறும் தனியார் பள்ளிகளுக்கு அரசே வழங்க வேண்டும் என்பது சட்டம். ஆனால் முந்தைய ஆட்சி காலத்தில் தனியார் பள்ளிகளுக்கு இந்த தொகை தாமதமாக வழங்கப்பட்டு வந்தது. திராவிட மாடல அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 1200 கோடி ரூபாயை பள்ளிகளுக்கு வழங்க அரசாணை வெளியிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. இனி வரும் கல்வி ஆண்டுகளில் குழந்தைகளுக்கான கல்வி கட்டணம் அந்தந்த ஆண்டு வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசு பள்ளிகளின் வளர்ச்சி மட்டும் இல்லாமல் தனியார் பள்ளிகளின் முன்னேற்றத்திற்காகவும் திராவிட மாநகர அரசு என்றைக்கும் துணை நிற்கும்.. கேலோ இந்தியா போட்டியில் முதல்முறையாக தமிழ்நாடு பறக்க பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்தது. கல்வி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு உடற்பயிற்சும் விளையாட்டு முக்கியம். நன்றாக விளையாடும் குழந்தைக்கு நல்ல ஆரோக்கியம் கண்டிப்பாக இருக்கும், நல்ல ஆரோக்கியம் இருந்தால் நன்றாக படிப்பார்கள்.. எனவே விளையாட்டு வகுப்பை கடன் வாங்கி கணக்கு, அறிவியல் வகுப்பை நடத்தவேண்டாம்" என்று கூறினார்.

# தமிழ்நாடு அரசின் முயற்சியால் உயர்ந்த யானைகளின் எண்ணிக்கை!

## இயற்கையைப் பாதுகாக்க முன்நிற்கும் முதலமைச்சர்!




தென்னிந்திய மாநிலங்களான கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் எல்லையோர மாவட்டங்களில் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு 23.5.2024 முதல் 25.5.2024 வரை நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பில் 1,836 வனத்துறை ஊழியர்கள் மற்றும் 342 தன்னார்வலர்கள், என மொத்தம் 2,178 நபர்கள் ஈடுபட்டனர். இந்த கணக்கெடுப்பில், சேகரிக்கப்பட்ட தகவல்கள் முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, 26 வனப் பிரிவுகளில் யானைகளின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பானது யானைகளின் எண்ணிக்கை, பாலின விகிதம், யானைகளின் இயக்கவியல் மற்றும் யானைகளின் வாழ்விடத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்கு யானைகளின் பயன்பாட்டின் பரப்பளவு பற்றிய தெளிவான விவரங்களை வழங்கும். தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கையையும் அதன் வாழ்வியல் முறைகளையும் அறிந்து கொள்ள உதவிடும் 2024ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை முதலமைச்சர் வெளியிட்டார்.

2017 கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,761 ஆக இருந்தது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றத்திலிருந்து யானைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2023—ன் படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,961 ஆக உயர்ந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக, 2024 ஆம் ஆண்டிற்கான யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழகத்தில் தற்போது யானைகளின் எண்ணிக்கை 3063 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலச்சரிவில் சிக்கி காட்டில் தஞ்சமடைந்த பாட்டி, பேத்தியை காத்த காட்டு யானை!



வயநாடு நிலச்சரிவில் சிக்கி தனது பேத்தியுடன் தப்பிய பாட்டி ஒருவர் கூறிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் வயநாடு பகுதியில் உள்ள சூரல் மலை, மேப்பாடி, முண்டகை ஆகிய பகுதிகளில் கடந்த 30—ம் தேதி அதிகாலை மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் 400—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிக்கி கொண்டன.

இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 344 ஆக அதிகரித்துள்ள நிலையில், ஏராளமானோரை காணவில்லை என்று உறவினர்கள் புகார் தெரிவித்துள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என அச்சம் எழுந்துள்ளது. இதனால் மீட்புப்படையினர் பல்வேறு இடங்களிலும் மீட்புப்பணியை துரிதப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், வயநாடு நிலச்சரிவில் சிக்கி தனது பேத்தியுடன் தப்பிய பாட்டி ஒருவர் கூறிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வயநாடு நிலச்சரிவில் இருந்து மீண்ட மூதாட்டி சுஜாதா என்பவர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், "வயநாடு நிலச்சரிவில் சிக்கிய நானும் எனது பேத்தியும் அங்கிருந்து தப்பித்து, அருகில் இருந்த காட்டுப்பகுதியில் தஞ்சமடைந்தோம். அங்கே காட்டுயானை எங்கள் எதிரே வழி மறித்து நின்றது.

"நாங்கள் ஏற்கனவே செத்து பிழைத்து வந்திருக்கிறோம்; எங்களை எதுவும் செய்து விடாதே!" என கண்ணீர் விட்டு மன்றாடினேன். எங்களின் அழுகையை புரிந்துக்கொண்ட யானை கண்களில் கண்ணீர் வடிந்ததை பார்த்தேன். நானும் என் பேத்தியும் அருகில் இருந்த மரத்துக்கு பக்கத்தில் உட்காந்துவிட்டோம். மீட்புக்குழுவி னர் அடுத்தநாள் வரும் வரை எங்களை பாது காக்க யானையும் அங்கே இருந்தது. பின்னர் தான் யானை அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது" என்று கூறியுள்ளார். இந்த நெகிழ்ச்சி சம்பவம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

தற்போது தமிழ் சொல் மாத இதழை ஆன்லைனில் படிக்க...
Scan and Read
www.tamilsoul.com

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR